[illegible]

V.II. No 12 [illegible] [4/29

JL
ஊ2.11,N1934
N39: 11.12

210781.

537

17 JUN 1930

REGD NO: M 1520.

"BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி

Vol XI } DEC. 1929 { No. 12

PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet. MADRAS.

வாசிப்பதற்கு இனிமையானதும் நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம், தேவையுள்ளவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய
நாராயணஜீ கேசவஜீ,
நெ. 1/94, சைனு பஜார் ரோட், சௌகார்பேட், மதராஸ்.

Moral class reading books for the young
BY
Yarakavi Tiru: A SUBRAMANYA BHARATI

	ரூ.	அ.	ப.
இராமாயண இரகசியம்	0	12	0
ஸ்ரீராமச்சந்திரன் — நல்ல பிள்ளை	0	2	6
பரதன் — நல்ல தம்பி	0	3	0
ஸீதாதேவி — நல்ல மனைவி	0	4	0
குகன் — சிறந்த நண்பன்	0	2	6
மாருதி — நல்ல அடிமை	0	2	6
விபீஷணன் — சிறந்த பக்தன்	0	1	6

For Copies, please apply to :—

BALAVINODINI OFFICE,
323, Tiruvottiyur High Road, MADRAS.

MADAN MANJARI PILLS

பூலோக அமிர்த மென்று புகழப்படுகின்ற இம்மாத்திரை அஜீரணம், மலச்சிக்கல், ரத்தக் குறைவு இவைபோன்ற சாதாரண வியாதிகளையும், நரம்புத் தளர்ச்சி, நபும்சகத்துவம், இவை போன்ற விசேஷ வியாதிகளையும் நீக்கி இளமையைக் கொடுப்பதில் நிகரற்றது.

40-மாத்திரைகள் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1 0 0

மதன் மஞ்சரி ஆபீஸ், 1/94, சைனு பஜார் ரோட், மதராஸ்.

எங்கும் புகழ்பெற்ற

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாசனை முதலிய எல்லாவற்றிலும் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா 4. ஷை சாதா ரகம் பொடி வீசை 1-க்கு விலை ரூபா $3\frac{1}{2}$.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L C. அவர்களால் பரிசோதிக்கப்பட்ட

R. S. சுகந்த மூக்குத்தூள்

விலை பாடல் 1-க்கு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 2 4 0 ஷை ஒரு சேர் டின் 1-க்கு ரூபா. 1 12 0 விபரங்களுக்கு எழுதவும். வி.பி. ரயில் சார்ஜ வகையரா பிரத்யேகம்.

விலாசம்:—பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ. 44. கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

மதனகாமேஸ்வர லேகியம்

இது மிக்க பலமும், வீரியவிருத்தியு முண்டாக்குவதில் மிக்க சிரேஷ்டமானது. மேகம், வெட்டை, பலயீனம், சுக்கிலநஷ்டம், நீர் வியாதி முதலான ரோய்களை நீக்கி பலமும், காந்தியும், சம்போகசத்தியும், சந்தானபிராப்தியு முண்டாக்குவதில் நிகரற்றது.

இரண்டு டப்பிகள் போதுமானது.

20 தோலா டப்பி 1-க்கு ரூபா	1	4	0
வி.பி. சார்ஜு	0	6	0

பி. சி. ஏ. அண்ட் கம்பெனி,
ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, நெல்லூர் ஜில்லா.

யூகலிப்டஸ் ஆயில்

ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய
சுத்தமான நீலகிரித் தைலம்

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷஜந்துக்களின்கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச்சுளுக்குகள், தீப்புண்கள், வெந்நீர்பட்டு வெந்தபுண்கள், பிளவைகள். புரைபோன ரணங்கள். இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்விஞல் உண்டாகும் கோரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல், கண்கட்டி முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

	ரூ.	அ.	ப.		ரூ.	அ.	ப.
1 அவுன்ஸ் புட்டி 1-க்கு	0	4	0	வி.பி. சார்ஜ்	0	4	0
1 ,, 1 டஜன் (12)	2	8	0	வி.பி. சார்ஜ்	0	12	0
1 அவுன்ஸ் புட்டி குரோஸ் 1-க்கு	28	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			
½ ,, டஜன் 1-க்கு	1	8	0	வி.பி. சார்ஜ்	0	10	0
½ ,, குரோஸ் ,,	17	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			
24 அவுன்ஸ் புட்டி 1-க்கு	2	8	0	வி.பி. சார்ஜ்	1	1	0
ஷை புட்டி டஜன் 1-க்கு	28	0	0	பாக்கிங் ரயில் சார்ஜ் வேறு.			

T. C. நாகலிங்கப்பா & கம்பெனி,
நெ. 280, வால்டாக்ஸ் ரோட்டு, பார்க்டவுன் போஸ்டு, சென்னை.

FEDERATED INDIA

(An all India English Weekly)

PUBLISHED EVERY WEEK

Annual Subscription Rs. 5.

PLEASE APPLY TO:—
THE MANAGER,
'FEDERATED INDIA,'
TONDIARPET, MADRAS.

தயாராய்விட்டது! *தயாராய்விட்டது!!*

திருப்புகழ் விருத்தியுரை

552-பக்கங்கள் **11**-படங்கள்

கிளேஸ் பதிப்பு ரூ **6.** பெதர்வெயிட் பதிப்பு ரூ. **8.**

இச்சிறந்த நூலில் சுவாமிமலை, பழநி, திருச்செந்தூர் ஆகிய திவ்ய ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள்மீது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய திருப்புகழப் பாடல்களும், அவற்றிற்கு பதவுரை, விருத்தியுரைகளும் கொண்டது.

விலாசம் :—
அல்லயன்ஸ் கம்பேனி,
ஷண்முக விலாசம், மயிலாப்பூர்,
சென்னை.

பாலர் கதாமஞ்சரி

22 இனிய கதைகள் எளியநடையில் எழுதியது.
விலை ரூபா **2.**
கீழ்நாட்டுக் கதைகள் **15** புஸ்தகங்கள்.
விலை ரூ. **3-9-0.**
பால ராமாயண வசனம். விலை அணா 12.
(மாதவையர் பதிப்பு.)

N. VENKATARAYALU & SON,
Books and Stationery Suppliers,
87, Ramaswamy Street, G.T., Madras.

எப்பொழுதும்

பா ர தீ பா ம்

என்னும் மருந்தையே உபயோகியுங்கள். இது எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்து. திமிர்வாத நோய்களிதைக் கண்ட மாத்திரத்தில் பரந்தோடும்.

புட்டி 1-க்கு விலை ரூபா	...	0	6	0
,, 12-க்கு ,, ,,	...	3	12	0

ஏஜெண்டுகள் தேவை. ஏஜென்டுகளாக விரும்புவோர்கள் 1 அணு தபால் பில்லை அனுப்பவேண்டும்.

பாரதி வைத்தியசாலை,
123, ஆதம் சாயபு தெரு,
ராயபுரம், சென்னை.

பிராஞ்சுகள் :—கரூர், திரிச்சினாப்பள்ளி.

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்

இதன் கிரயம்.

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை	ரூ.	15	0	0
48 ,, 24 ,, மருந்து டப்பி 1-க்கு	,,	8	0	0
24 ,, 12 ,, ஷை	,,	4	4	0

எவ்விதமான பத்தியமில்லை. சிங்கை, பினாங், கொச்சின், சீனா, ஜாவா, சுமாற்றா முதலிய ஊராரும் மருந்து கிரயமும் போஸ்ட் சார்சு ரூபா 2 சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும்.

தாமரை லிங்கத்தைலம்.

கனவான்களே! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமான அளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின்மீது தேய்த்துவிடுவீர்களானால் தாங்கள் இதுவரையில் பார்த்திராத ஆச்சரியத்தைத் தரும்படியான கருவிகளைப் பெருக்கச்செய்து நரம்புகளுக்கு பலமும் திமிரும் உண்டாக்குமென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகரபாட்டில் விலை 1—0—0 வி. பி. பாக்கிங் சிலவு பிரத்தியேகம்.

லாஹோபியா மருந்துசாலை,
நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது தயவுசெய்து பத்திரிகை பேரைக் குறி

ரூ. **3–15** இம்மாதம் வரைதான் குறைந்த விலை. ரூ. **3–15**

மோசமடையாதீர்கள்—மேக்கரை கவனித்து வாங்கவும். கெடியாரமென்றால்-எல்லாம் கெடியாரமாகி விடுமா? கவனியுங்கள். சரியான காலம் காட்டக்கூடியதும் நீண்ட காலம் உழைக்கக்கூடிய

இனும் ரிஜிஸ்டர் லிவர் பாக்கெட் வாச் இனும் No. 2.



இங்கிலாந்தில் செய்தமாகூிமை தங்கிய 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தியால் புகழப்பெற்று ரிஜிஸ்டர் W. B பவுண்டன் பேறு தங்க ப்ளேட் கிப்புள்ளது. இதை வாங்குபவர்களுக்கு 5 வருஷம் உத்திரவாதமுள்ள லிவர் வாச் இனும். முந்துங்கள். 5 ரூ. மதிப்பிடக் கூடியது.

SWISS WATCH Co., (V) PAREL, BOMBAY 12.

THE LAW OF ELECTION

BY

K. L. NARASIMHA RAO,

Advocate, High Court, Madras.

Contains all the Acts, Rules, Regulations, and Form brought up-to-date regarding Elections to every Statutor Body from the Village Panchayat to the Council of Stat Indispensable to every public-worker and practitioner.

Price Rs. 3-8-0. *(Postage Extra.)*

"SRI RAMA PRESS" *3, Sivaramulu Chetty St.,*
Tondiarpet, MADRA

Dr. Matameswara Row,

Physician and Surgeon,
ASTHMA SPECIALIST.

பெஜவாடா சிவாலயத் தெருவில் கனம் சேகுவார் மெத்தையில் பழைய போலீஸ் ஸ்டேஷனருகில் டாக்டர் மடமேஸ்வர ராவ் என்னும் பம்மாய் வைத்தியர் ஔஷத ஆலயம் திறந்திருக்கிறார். இவர் நீர்கடுப்பு, (Asthma) இருமல் இந்த நோய்களை நீக்குவதில் வெகுநிபுணர். கியாரண்டியுடன் வைத்தியம் செய்யப்படும். கண்வைத்தியமும் செய்வார். மேகவியாதிகளுக்கும், சுகசம்பந்தமான நோய்களுக்கும் நல்ல சிகிச்சை செய்யப்படும். இந்த வியாதிகள் இரகசியமாய் பார்த்து வைத்தியம் செய்யப்படும். இவர் ரணவைத்தியமும் செய்வார். ஸ்திரீகளுக்கு மருத்துவமும் செய்யப்படும். கல்விச்சாலை மாணுக்கர்களுக்கு மலிவாய் வைத்தியம் செய்யப்படும்.

ஷரா:—ஏழைகளுக்கு தருமமாய் வைத்தியம் செய்யப்படும்.

படியுங்கள்! ஆனந்தப்படுங்கள்!!

ஆரியமத தத்துவபோதினி

இதில் மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சுலபமாக அறிந்துகொள்ளும்படி ஸஜ்ஜனங்களாகிய ஆரியமத தத்துவங்களெல்லாம் வினு, விடை ரூபமாக உரைக்கப்பட்டிருக்கின்றன. இதைப்படித்தால் மனிதர்கள் இந்துமத தத்துவங்களையும் தர்மங்களையும் நீதிகளையும் தெரிந்துகொண்டு, கியானத்தை யடையலாம். விலை அணு **4.**

வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்,
எஸ்பிளனேட், மதராஸ்.

பதினோராவது ஆண்டு

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 1 8 0
வெளிநாட்டிற்கு ரூ. 2 0 0

எங்கும் புகழ்பெற்ற

A. S.

சுகந்த மூக்குத்தூள்

இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்து உபயோகித்தால் இன்பமான சுகந்த வாசனையைத் தருவதோடு கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் கண்டிக்கும் வாங்குபவர்கள் ஏ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

A. S. சுகந்த மூக்குத்தூள்.
புட்டி 1-க்கு 0—4—0
டஜன் 1-க்கு 2—4—0
சேர் 1-க்கு 3—0—0

M. J. பரிமள மூக்குத்தூள்.
சேர் 1-க்கு 1—8—0
டஜன் 1-க்கு 2—0—0

குணம்மணம்காரம், வாடை முதலியவை. ஒருங்கேஅமையப்பெற்றது

A. S. பட்டணம் பொடி

சேர் 1-க்கு ரூ. 0—12—0 வீசை 1-க்கு 3—4—0
தபால் சார்ஜ் பிரத்யேகம். பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

ஏ. எஸ். மகம்மது ஷம்சுத்தீன் சாயபு,
106, தங்கசாலை வீதி, சௌகார்பேட்டை,
P. B. No. 1201, MADRAS. (B)

குழந்தைகள்

ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், வளரவேண்டுமானால், உலகப்ரசித்திபெற்ற,

"பாலமித்திரா மாத்திரைகளை"

உபயோகியுங்கள். 300 மாத்திரைகள் விலை ரூ. 1—0—0 முழுவிபரங்களுக்கு எங்கள் இலவச புத்தகத்தைப் படியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ பார்மஸி,
26, பிராட்வே, மதராஸ்.

பாரதம்—ஆதிபர்வம்

தமிழ் வசனம்

நல்ல உயர்ந்த கிளேஸ் பேப்பரில் ஆப்டோன் படங்களுடன் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டுள்ளது. பாரதம் படிப்பவர்களுடைய பாபத்தைப் போக்கவல்லது; காரியசித்தியை அளிக்கத்தக்க மகிமையை உடையது. சகல ஞானத்தையும் போதிக்கத் தக்கது. ஆதலால் பெரியோர் இதனை ஐந்தாம் வேதமென்றும் கூறுகின்றனர். இந்த வசனம் பிரசங்க ரத்னாகரம் வித்வான் த. சண்முகக் கவிராயர் என்பவர் எழுதியது, இந்நூலை வாசிப்பவர் பிரசங்கவன்மையை அடைவதுடன் இனிய வசனம் எழுதும் பாஷாஞானத்தையும் பெறுவார். ஆதலால் இந்த நூலை வாங்கிப் படிக்க வேண்டியது நம் தமிழ் நாட்டு ஸ்திரி புருஷர்களுடைய கடமைகளிலொன்றாகும். மற்றைய பருவங்களும் விரைவில் அச்சாகிவருகிறது.

ஆதிபர்வம் காலிகோ பயிண்டு விலை ரூபா **3-8-0.**

V. RAMASWAMY SASTRULU & SONS,
*292, **E**splanade, Madras.*

தமிழ் நூல்கள்.

எமது காரியாலயத்தில் தமிழ் நூல்கள் உயர்ந்த காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப் பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.	பை
சதகங்கள் (குறிப்புரையுடன்).			
குமரேசசதகம்	0	5	0
கோவிந்தசதகம்	0	2	0
அறப்பளீசுர சதகம்	0	5	0
திருவேங்கட சதகம்	0	5	0
தண்டலையார் சதகம்	0	3	6
பாராயண நூல்கள் (குறிப்புரையுடன்).			
கந்தர் கலிவெண்பா	0	1	6
சரஸ்வதி அந்தாதி	0	1	6
அபிராமி அந்தாதி	0	1	6
கந்தரனுபூதி	0	1	6
திருமுருகாற்றுப்படை	0	2	0
நால்வர் நான்மணிமாலை	0	1	6
விநாயகர் அகவல்	0	1	0
இலக்குமி தோத்திரம்	0	1	0
ஆனந்தலகரி	0	1	6
சௌந்தரியலகரி "	0	1	6
நீதிநூல்கள் (குறிப்புரையுடன்).			
திருக்குறள்	0	8	0
நாலடியார்	0	6	0
நீதிநெறி விளக்கம்	0	1	6
ஆசாரக்கோவை	0	2	0
(பதவுரையுடன்).			
வாக்குண்டாம்	0	1	6
கொன்றைவேந்தன்	0	1	6
வெற்றிவேற்கை	0	1	6
நல்வழி	0	1	6
நன்னெறி	0	1	6
திருக்குற (பரிமேலழகர் உரை)	2	0	0

திருக்குறள் விளக்கும் நூல்கள் (குறிப்புரையுடன்).	ரூ.	அ.	பை.
சிவசிவ வெண்பா	0	2	0
சோமேசர் முதுமொழி வெண்பா	0	2	0
இரங்கேசவெண்பா	0	2	6
ஆத்திசூடி வெண்பா	0	1	6
திருத்தொண்டர் வெண்பா	0	1	6

திரட்டு நூல்கள்.

திருவருட்பா	0	6	0
திருப்புகழ்	0	2	6
பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டு ...	0	3	0
தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு ...	0	4	0
தேவாரத் திருமுறைத்திரட்டு	0	10	0

இலக்கணமும், நிகண்டும்.

நன்னூல்	0	3	0
நேமிநாதம்	0	2	0
புறப்பொருள் வெண்பா மாலை	0	7	0
பதினோராவது நிகண்டு	0	6	0
சேந்தன் திவாகரம்	0	2	0
பாலபோத இலக்கணம்	1	0	0

வசன நூல்கள்.

கதாமஞ்சரி	0	4	0
ஜீவகாருண்ய ஒழுக்கம்	0	4	0
மனுமுறைகண்ட வாசகம்	0	5	0
விநோதரசமஞ்சரி	0	8	0
பரமார்த்த குரு கதை	0	4	0
*சாவித்திரி சரித்திரம்	0	6	0
பஞ்சதந்திரம்	0	8	0
இராஜரிஷி (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்) ...	1	4	0
ரூவெங்கார்	1	8	0
மகாதேவன் ஒரு இனிய தமிழ் நாவல் ...	0	12	0
பாரதவசனம் ஆதிபர்வம்	3	8	0

V. Ramaswamy Sastrulu & Sons,
Book Sellers & Publishers, 292, Esplanade, Madra

|| क्रय्यसंस्कृतपुस्तकानि ||

	रू.	आ.
संस्कृतबालशिक्षा आन्ध्रलिप्या समलंकृता श्रीरामायण-संग्रहसहिता च संस्कृतान्ध्राक्षरजिज्ञासूनामत्युपयोगिनी	०	३
हिन्दी तेलुगु बालशिक्षा	०	३
,, प्रथमवाचकम्	०	८
संस्कृतान्ध्रवर्णबोधिनी पत्रफलका	०	२
सरस्वतीप्रार्थना, श्यामलादण्डकम्, नवरत्नमाला च	०	२
शब्दमञ्जरी, (दृढपत्रात्मिका)	०	६
अमरकोशः	०	८
हितोपदेशः	०	१२
रघुवंशमहाकाव्यम् सव्याख्यानम	१	४
मेघसन्देशः ,,	०	८
भोजचरित्रम्	०	८
विक्रमार्कचरित्रम्	०	१०
व्रतरत्नाकरः	१	८
महाकविबोधायनकृत भगवदज्जुकनाटकम्	०	६
अभिज्ञानशाकुन्तलनाटकम्		....
भर्तृहरिशतकत्रयम्, मूलम्	०	८
बालरामायणम्	०	[illegible]
विवेकचूडामणिः	०	[illegible]
रामकर्णामृतम्	०	[illegible]
श्रीकृष्णकर्णामृतम्	०	[illegible]
आंग्लानुवादसहितम्	१	

शिवकवचम्

शिवानन्दलहरी

आदित्यहृदयम्

श्रीगोविन्दद्वादश (चतुर्दश) मञ्जरिकास्तोत्रम्

श्रीलक्ष्मीनारायणहृदयम्

पञ्चसूक्तानि

रुद्रनमकचमकम्

यजुर्वेदसन्ध्यावन्दनम्

यजुर्वेदाह्निकम्

श्रीवैष्णवाह्निकम्

सूर्यनमस्कारमन्त्राः त्र्युचत्र्यक्षयज्ञसहितास्संस्वराश्च

श्रीदक्षिणामूर्तिस्तोत्रम्

आळवन्दारस्तोत्रम्

सौन्दर्यलहरीस्तोत्रम्

लक्ष्मीनृसिंहस्तोत्रम्

देवीस्तोत्रकदम्बः

मुकुन्दमाला

बृहत्स्तोत्ररत्नाकरे प्रथमभागः

बृहत्स्तोत्ररत्नाकरः (द्वितीयभागः)

श्रीमद्रामायणे बालकाण्डः

,, अयोध्याकाण्डः

,, आरण्यकाण्डः

,, किष्किन्धाकाण्डः

,, सुन्दरकाण्डः

,, युद्धकाण्डः

गद्यत्रयम्		०	३
ब्रह्मसूत्राणि, मूलमात्रम्		०	२
भगवद्गीता मूलमात्रम्		०	४
विष्णुसहस्रनामस्तोत्रम् (नामावळीसहितम्)		०	४
ललितासहस्रनामस्तोत्रम्	,,	०	६
लक्ष्मीसहस्रनामस्तोत्रम्	,,	०	४
सुब्रह्मण्यसहस्रनामस्तोत्रम्	,,	०	४
शिवसहस्रनामस्तोत्रम्	,,	०	४
वेङ्कटेशसहस्रनामस्तोत्रम्	,,	०	४
अन्नपूर्णासहस्रनामस्तोत्रम्	,,	०	४
आंजनेयसहस्रनामस्तोत्रम्	,,	०	४
गणपतिसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीरामसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीकृष्णसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीगोपालसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीलक्ष्मीनृसिंहसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीवटुकभैरवसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीभवानीसहस्रनामस्तोत्रम्	,,	०	४
श्रीकालिकासहस्रनामस्तोत्रम्	,,	०	४

वाविळ्ळ रामस्वामिशास्त्रुलु अण्ड् सन्स्,

२९२, एस्प्लनेड्, मद्रास्.

மகத்தான

லாபகரமான விற்பனை.

வாசித்து, யோசித்து, ஆர்டர் செய்யுங்கள்.

ஆச்சரியமான போட்டோ பிடிக்கும் காமிரா.

அதிகப் பணங்கள் செலவிட்டு, பெரிய கனதனவான்களின் உபயோகத்திற்காகவென்றே தயார் செய்யப்பட்டது. இந்தக் காமிராவினால், நீங்கள் பறவைகள், ஆகாயக்கப்பல்கள், மரங்கள், வீடுகள், மற்றும் ஆண்பெண் பாலர் உட்கார்ந்து போட்டோ பிடிக்கவும் கூடும். ஒவ்வொரு காமிராவினோடும், நாங்கள் அதற்கான சாமான்களையும், உபயோகிக்கும் விதத்தையும் அனுப்புகிறோம். இத்தகைய கிடைப்பதற்கரிதான கிராக்கியை வரங்காமல் விடாதீர்கள். விலை ரூ. 5-0-0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஆச்சரியமான விளையாடும் காகிதங்கள்.

நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. பணக்காரர்கள் சந்தோஷமாய்ப் பொழுதைப் போக்கக்கூடியது.

கையிருப்பு குறைந்து வருவதால் இன்றே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் தனி.

கைத் தையல் மிஷின்.

இதனால் பெண்கள் அழகான புஷ்பங்கள், படங்கள், பட்டு, கம்பளி அல்லது நூலால், தலைகாணி, தலையணை உறை, பட்டு மேலாக்கு, நிஜார் இவைகளில் சுலபமாய் போடக் கூடும். போடும் விதம் மிகசுலபம். சுலபமாய் பணம் சம்பாதிக்கலாம். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெண்பாடசாலைகளிலும் இம்மிஷின் இருப்ப தவசியம். மிஷின் ஒன்று விலை ரூ. 4-0-0.

தபால் சார்ஜ் தனி.

ஜோதிஷம்.

நூதனமாக ஜர்மன் தேசத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அரை நிமிஷத்தில் கீழ்ச் சொல்லிய முதலான அரிய சமாசாரங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

1. ஒருவனுக்குப் பிறக்கப் போகும் குழந்தை பெண்ணோ பிள்ளையா?

2. ஒருகேஸில் நீ அடைவது ஜயமா அல்லது தோல்வியா?

3. பரீக்ஷை முதயலிதுகளில் நீ தேருவாயா மாட்டாயா?

இதன் விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

K. L. காபூர் அண்டு கோ.,

லோஹாரி மண்டி, லாகூர்.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி II	1929௵ டிசம்பர் மாதம்	12

தெய்வ வணக்கம்

1 வையிற்கதிர் வடிவேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கண்
நுங்கட் கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா வுடம்பின்
வெறு நிழல்போல்
கையிற் பொருளும் உதவாது காணும்
கடைவழிக்கே.

2 மொய் தாரணிகுழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையுமங்கு வாழவைப்போன் வெய்ய
வாரணம்போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும்
கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த
இலஞ்சியமே.

(கந்தரலங்காரம்)

ஹிதோபதேசம்

1. கப்பலோட்டச் சரியான மாலுமி யிருந்தால், கடலலைக்குப் பயப்படவேண்டுமா? இல்லை. படிக்கவேண்டிய புத்தகங்களை நன்றாய்ப் படித்திருந்தால், பரீக்ஷைக்குப் பயப்பட வேண்டுமா?- இல்லை. நடிக்கவும் பேசிப்பாடவும் தெரிந்திருந்தால், ஒரு நாடகபாத்திரன், நாடகமேடையி லேறிப் பலர் முன்னிலையில் நடிக்க அஞ்சுவதுண்டா? இல்லை. நல்ல யோக்யதையைத் தேடிக்கொண்டிருந்தால், சபையில் பிரவேசிக்க அஞ்ச வேண்டுமா? இல்லை. இவைபோல் கடவுளின் திருவருளைத் தேடிக்கொண்டோமானால், நாம் எந்த வேளையிலும், எந்த ஓர் ஆபத்துக்கும், எந்த ஓர் கொடுமைக்கும் அஞ்சவேண்டுவதில்லை. இதனாலே தான் பெரியார் 'கடவுளை நம்பு, கடவுளைத் தொழு, கடவுளைத் துதி! அவர் அருளைத் தேடிக்கொள்'' என்று கூறுகிறார்கள்.

2. எலியின் முன் பூனை புலி. ஆனால் புலியின் முன்போ ஒன்றுமில்லை. மூடர்முன் வஞ்சகன் பிராக்ஞன். கற்றறிந்த மேதாவிகளின் முன் ஒன்றுமில்லை இவைபோல்-டாம்பீகன், பணக்காரன், அதிகாரபுருஷன், பலசாலி என்கிற இறுமாப்பினால் ஆணவங்கொண்டு எளியவர்களை மிரட்டுகிறவர்களெல்லாரும் எல்லாம், வல்ல இறைவனுடைய ஸந்நிதானத்தின்முன் விசாரணை நடக்கும்போது என்ன

செய்யமுடியும்? ஒன்றும் செய்ய இயலாதாகையினால், என்றும், எக்காலத்தும், எந்த ஓர் ஆதிக்யத்தையும் பெரியதாயெண்ணி இறுமாப்படைவது கூடாது.

3. சூரியனைக் குருடன் பாராவிட்டால் சூரியனுக் கென்ன குறை? ஒன்றுமில்லை. பெரியோரை மூடன் விசாரிக்காவிட்டால்,அவர்களுக் கென்ன குறை? ஒன்றுமில்லை. அதுபோல், கடவுளைப் பாஷண்டிகள் தொழாவிட்டால் அவர்க் கென்னகுறை?

4. உலகம் பல விதம். ஒருவன் மெய்யென்று சொல்வதை, இன்னொருவன் பொய்யென்று சாதிப்பான். ஒருவன் நல்லதென்று சொல்வதை, இன்னொருவன் தீயதென்று கூறுவான். ஒருவன் உழைத்து உணவு கொள்வதென்று கருதிப்பாடுபட்டுழைத்துப் பணந்தேடி உண்பான். ஒருவன் மலைப்பாம்புபோல் இருந்த இடத்திலே யிருந்து, சோம்பலையே துணையாக நம்பி வலிதிற் கிடைக்கும் உணவை உண்டு காலந் தள்ளுவதையே உசிதமென்று கொள்வான். இன்னொருவன் பத்துவீடு போய் மானத்தைவிட்டு இல்லையென்று கேட்டு வாங்கி உண்பதில் பிரியங் கொள்வான். ஆதலால் நாம் எதையும் யாருடைய செய்கையையும் தூஷிக்காமல், நமக்கு நம்முடைய பெரியார்கள் ஏற்படுத்தியுள்ள கடமைகளைச் செய்து கொண்டு, காட்சிமாத்திரமாய் யாவற்றையும் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

5, ரோஜாபுஷ்பத்தின் அடியிலும் தண்டிலும் முட்களுண்டு. முட்க ளிருக்கின்றனவென்று அந்தப்

புஷ்பத்தை யாராவது விரும்பாதிருப்பதுண்டா? இல்லையல்லவா! ஆகையினால், கல்வி கேள்விகளிலே தேர்ந்த பெரியாரிடம், ஏதாவது ஒருகுறையு மிருக்குமானால், அது கண்டு அவரை நெருங்காமலும், அவரைவிரும்பாமலும் இருப்பதுகூடாது. நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவைகளை எப்பாடுபட்டாவது அவர்களை யடைந்து கற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் நாம் நன்மையை அடையமுடியும். இல்லை, குற்றங்கூறிக்கொண்டு திரிந்தால், முன்னுக்கு வரமுடியாது. இதனாலே தான் 'குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்,' என்று கட்டளையிட்டனர் பெரியார்.

6. கிளியைப்போல் அழகாய்ப் பேசு. கொக்கைப் போல் தெய்வத்தியானம் செய். ஆடு தழைகள் புசிப்பதுபோல் சுவையுண்டாம் வண்ணம் நன்றாய் மென்று சாப்பிடு. யானையைப்போல் அமிழ்ந்து முழுகு.

7. தனவந்தர்களிடம் ஒருவிதமாயும் ஏழைகளிடம் ஒருவிதமாயும் நடவாதே. இருவரும் கடவுளுடைய படைப்பில் அடங்கியவரென்பதை நினைப்பிலே வை. எளியவர்களுக்குத் துன்பம் விளைவிப்பவன் கடவுளைப்பழித்தவனாவன். ஈசனைக்கௌரவப்படுத்த விரும்புகிறவன் எளியவர்களிடம்தயை பாராட்டுவான்.

8, நீ உன் வேலைக்காரனைத் துன்பப் படுத்தாதே! நீயும் உலகத்திலுள்ள யாவரும் கடவுளின் முன் வேலைக்காரர்கள் என்பதை எண்ணிப்பார்.

யார் மூடன்?

ஒரு வேந்தன் கொலுவில் வீற்றிருந்தான். அப்பொழுது ஒரு குதிரை வியாபாரி பிரவேசித்து அவனை வணங்கி, தான் அநேக ஜாதி உயர்ந்த குதிரைகள் கொண்டு வந்திருப்பதாகக் கூறினான். அரசன், உடனே கொலுவிலிருந்து புறப்பட்டுப்போய் அக் குதிரைகளை யெல்லாம் பார்த்தான். குதிரைகள் உயர்ந்த ஜாதிக் குதிரைகளா யிருந்தமையால், விலை கேட்டான். குதிரை வியாபாரி, 'ஐந்து லட்சம் 'பவுன்கள்' என்று சொன்னான்.

குதிரைகள் சிறந்தவைகளா யிருந்தபடியால அரசன் வியாபாரி கேட்டபடி, ஐந்து லட்சம் பவுனையும் கொடுத்துக் குதிரைகளை வாங்கினான். பின் "உன்னிடம் இவைகளைப் போன்ற குதிரைகள் இன்னும் இருக்கின்றனவா?" என்று கேட்டான்.

'குதிரை வியாபாரி "இன்னும் ஆயிரம் குதிரைகளிருக்கின்றன. அவைகளின் கிரயமும் ஐந்து லட்சம் பவுன்கள்" என்றான்.

வேந்தன் சந்தோஷ மிகுதியினால் சிறிதும் ஆலோசனை செய்யாமல், அந்த வியாபாரியிடம் ஐந்து லட்சம் பவுனையும் முன் பணமாகவே கொடுத்து 'சீக்கிரம் குதிரைகளைக் கொண்டுவந்து சேர்' என்று கட்டளை யிட்டனுப்பினான்.

குதிரைவியாபாரி, 'ஆக்ஞைப்படி கொண்டு வந்து சேர்க்கிறேன்' என்று கூறிவிட்டு, ஐந்து லட்சம் பவுனைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான். இச்செய்தி அமைச்சனுக்குத் தெரிந்தது. அவன், அரசனைப் பார்த்து "முன் பின்அறியாதவனிடம் இவ்வாறு நம்பி ஐந்து லட்சம் பவுனைக் கொடுக்கலாமா? இப்படிக் கொடுத்தது பெரிய மூடத்தனம்" என்றான்.

அரசன், "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அவ் வியாபாரி தவறாமல் குதிரைகள் கொண்டுவந்து விடுவான். அப்படி அவன் கொண்டுவந்து விடுவானானால், அப்பொழுது 'பார் மூடன்" என்று கேட்டான். மந்திரி "அந்த வியாபாரி பெரிய மூடன்" என்றான்.

வாய் நன்றாக இருந்தால் ஊர் நன்றா யிருக்கும்.

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசம்

ஒருவன் கற்பக விருக்ஷத்தின் கீழே உட்கார்ந்து கொண்டு நான் ஒரு ராஜாவாக வேண்டுமென்று எண்ணினான். அவன் உடனே ராஜாவாய் விட்டான். பிறகு அவன் ஓர் அழகிய பெண்ணை விவாகம் புரிந்து கொள்ள இச்சித்தான். உடனே ஓர் அழகிய பெண் அவனிடம் வந்து நின்றாள். பின் அவன் அந்த மரத்தினுடைய இந்த ஆச்சரியமான தன்மையைச் சோதிக்க எண்ணி, 'ஒரு புலி இங்கே வந்து என்னை விழுங்கட்டும்' என்றான். உடனே அங்கே ஒரு புலி தோன்றி அவனை விழுங்கி விட்டது.

இவ் விருக்ஷம் மனிதன் விரும்பியதை அளிப்பதைப்போல் கடவுளும் பக்தன் விரும்பியதை அளிக்க வல்ல ஒரு பெரிய கற்பகவிருக்ஷம். எந்தப் பக்தனாவது 'நான் ஒன்றும் அடையவில்லை' என்று கூறுவானானால் அவன் ஒன்றையும் அடைய மாட்டான். "ஏ கடவுளே! நீ என்க்கு எல்லா நன்மைகளையும் கொடுத்திருக்கிறாய்" என்று கூறுவானானால் அவனுக்கு எல்லா நன்மைகளு முண்டாகும.

போஜன விதிகள்

1. நீ ஜீரண சக்திக்குத் தக்கபடி உணவை உண்ணு. (இல்லையேல் நோயென்னும் பேய் உன்னைப் பிடித்துக்கொள்ளும்.)

2. ஜீவித்திருக்கச் சாப்பிடுகிறோம் என்று எண். சாப்பிடுவதற்காக ஜீவித்திருப்பதாக எண்ணாதே.

3. போஜன காலங்களுக் கிடையில் அநேகமாக ஒன்றும் புசியாதே.

4. கூடுமான வரையில் குறிப்பிட்ட நேரங்களிலே சாப்பிடப் பழகு.

5. போஜனத்திற்கு முன் கை, கால் முகங்களை, நன்றாய்க் கழுவிச் சுத்தஞ் செய்து கொண்டு சாப்பிடு.

6. போஜனமுண்ட பின் கை கால் முகங்களைச் சுத்தமாய்க் கழுவிக்கொள்.

7. சாப்பிட்ட பிறகு சிறிது நேரம் கடினமான வேலை எதுவும் செய்யாதிரு. சாப்பிட்டவுடன் ஸ்நானமும் செய்யாதே.

ஓர் உத்தம வேந்தன்.

பண்டைக் காலத்தில் வேந்தர்கள் மாறு வேஷம் பூண்டு இரவில் நகர் சோதனைக்குச் செல்வதுண்டு. சில நாட்களில் பகலிலும் அவ்வாறு செல்வதுண்டு. இப்படிச் செய்வது அரசர்களுக்குரிய கடமைகளில் ஒன்று. குடிகளை அவர்கள் தங்களுயிரைப்போல் பாதுகாத்து வந்ததால், குடிகள் அவர்களைத் தங்களுயிர்போ லெண்ணி அவர்களுக்குத் துணையாயிருந்து அவ்வக் காலத்தில் ஆகவேண்டிய காரியங்களைத் திருப்தியாய் முடித்து வருவார்கள். இராஜாக்களும் குடிமக்களுக்கு அவசியமான சௌகரியங்களைக் கவனித்து வருவார்கள். உதாரணமாக ஒரு சிறு கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

பாண்டிய ராஜ்யத்தில் வேதியரொருவரிருந்தார். அவர் தமது குலாசாரங்களில் சிறிதும் தவறுவதில்லை சாஸ்திரங்களிலும் வல்லமை யுடையவர். ஒரு சமயம் அவர் வெளியூருக்குப் போக நேர்ந்தது. அவருக்குத் தம் மனைவியைத் தவிர வேறு துணையில்லை. அதனால் அவர் அவளைத் தனியே விட்டு விட்டு எப்படி வெளியே போவது என்கிற கவலை கொண்டார்; நெடு நேரம் பலபல யோசனைகள் செய்தார்; முடிவில் ஒரு வித தீர்மானத்துக்கு வந்தார். தாம் குடியிருக்கும் ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் வேந்தன் நல்ல குணங்களைப்

படைத்தவன். தப்பான விவகாரங்களில் ஒருபோதும் தலையிடாதவன். தன் பிரஜைகளுக்கு வரும் துன்பங்களைத் தனக்கு வந்ததாக நினைப்பவன். ஆதலால் இத்தன்மையான அரசனது மேற்பார்வையின் கீழே தம் மனையாளை ஒப்புவித்துவிட்டுத் தாம் வெளியே போனால் ஒரு கெடுதியும் அவளுக்கு நேரிடாது என்று துணிந்தார்.

இப்படித் துணிந்தவர் உடனே அரசனிடம் சென்று அவனை ஆசிர்வதித்தார். அரசனும் அந்தப் பிராமணருக்குச் செய்யவேண்டிய வந்தனோபசாரங்களைப் பிரீதியுடன் செய்து அவரை நோக்கி "சுவாமி! தாங்கள் இவ்விடம் எழுந்தருளியது யான் செய்த பாக்கியமேயாகும். விசேஷம் இருப்பின் தெரிவித்தருளப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

அந்தணர் "அரசே! நான் வெளியூருக்குப் போய் வர வேண்டியதாய் இருக்கிறது. போகும் பட்சத்தில் என் மனைவியைத் தனியே விட்டுப் போக வேண்டும். அவளுக்கு வேறு துணையில்லை. உமது ராஜ்யத்தில் குடிகளுக்கு எவ்வித தொந்தரவும் எவ்வுயிராலும் நேரிடாதென்பதை நான் நன்கு யறிவேன். சத்திய நெறியையே பத்தியமாகக் கொண்டொழுகும் உத்தம வேந்தனது அரசாட்சியில் எத்தகைய துன்பமும் விளைவதில்லை என்பது நூல்களின் துணிபல்லவா! ஆகவே உம்மை நம்பி என் மனைவியை வீட்டில் தனியே விட்டுப் போகிறேன். பார்த்துக்கொள்ளும்" என்று சொல்லி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

போனவர் சீக்கிரத்திலேயே தமது வீட்டுக்குத் திரும்பி விட்டார். வழக்கம்போல் நகர் சோதனைக்குப் புறப்பட்ட அரசன், வேதியர் வந்துவிட்டதை யறியானாகையால், அவர் வீட்டில் பேச்சு சந்தடி யுண்டாவதைத் தன் காதால் கேட்டு, சந்தேகங் கொண்டு, 'நம்மை நம்பிவிட்டுப் போன அந்தணரின் மனைவியுடன் யாரோ வார்த்தையாடுகின்றனர். விவரங் கண்டறிய வேண்டும்" என்று நினைத்து அந்த வீட்டின் கதவைத் தட்டினான். வீட்டுக்குரிய பிராமணர் கோபாவேசத்துடன் "இந்த அர்த்த ராத்திரியில் யார் என் வீட்டுக் கதவைத் தட்டுகிறது?" என்று சொல்லிக் கூக்சலிட்டார். அந்தத் தொனி தன்னிடம் விடை பெற்றுச் சென்ற அந்தணருடையது என்று தெரிந்துகொண்ட மன்னவன், அச்சமும் நாணமும் அடைந்து, பதிலொன்றும் பேசாமல் அவ் வீட்டின் அக்கம் பக்கத்திலுள்ள எல்லா வீடுகளின் கதவுகளையும் தட்டிக்கொண்டே தனது அரண்மனைக்குச் சென்றான்.

சென்ற வேந்தனுக்கு அன்றைய இரவெல்லாம் நித்திரை வரவே யில்லை. பலவித எண்ணங்கள் அவன் மனத்தை வருத்தியபடி யிருந்தன. "நாமில்லாத காலத்தில் நம் மனைவியுடன் எவனோ அயலானொருவன் வந்து சம்பாஷித்து விட்டுப் போகிறான்போலிருக்கிறது. இல்லாவிட்டால் நமது வீட்டுக் கதவு ஏன் தட்டப்பட வேண்டும்—என்று அந்தப் பிராமணர் நினைத்துத் தமது மனைவியின் மேற் கெட்ட சந்தேகங் கொண்டு அந்த உத்தமியை நிந்திப்பாரோவென்று சிந்தை கலங்கினான்.

இவ்வாறு கலங்கிய வேந்தன், பொழுது விடிந்த பின் படுக்கையிலிருந் தெழுந்து, காலைக் கடனை முடித்துக் கொண்டு கொலுமண்டபத்தை யடைந்தான். பிரதான மந்திரியை அழைத்து "அமைச்ச! புருஷன் வெளியேபோயிருக்க அவன் மனைவி மாத்திரம் தனித்திருக்கும் ஒரு வீட்டின் கதவை நடுராத்திரியில் அயலா னொருவன் தட்டினால் அந்த அயலானுக் கென்ன தண்டனை விதிக்கலாம்? தீர்க்கமாய் யோசித்துச் சொல்ல வேண்டும்" என்று வினவினான். அது கேட்டு மந்திரி "மகாராஜரே! அப்படிச் செய்தவன் எந்தக் கையால் கதவைத் தட்டினானோ, அந்தக்கையை வெட்டி யெறிந்துவிட வேண்டும். அதுதான் அக் கொடியவனுக் கேற்ற தண்டனை" என்று சொன்னான்.

அரசன் "அக் குற்றத்தை நானே செய்தபடியால் என் கையை வெட்டிவிட வேண்டும்" என்று சொல்லி வாளால் தன் கையைத் தானே வெட்டிவிட்டான். பிறகு விவரம் தெரிய வந்தது; "அரசன் செய்தது குற்றமாகாது. அது அவன் கடமையைச் சார்ந்தது. தீய எண்ணம் அவன் கொள்ளவில்லை. ஆகையால் அவன் தன் கையைத் தானே அவசரப்பட்டு வெட்டிக் கொண்டது அநீதம். கடவுள் இத்தகைய உத்தம வேந்தனுக்கு அநுக்கிரகம் புரிய வேண்டும்" என்று யாவரும் ஒன்றுகூடிப் பிரார்த்தித்தார்கள். உடனே "பொற்கை யொன்று செய்து வெட்டுண்ட கைக்குப் பதிலாக அமைத்துக்கொள்" என்று அசரீரி வாக்கொன் றுண்டாயிற்று. அவ்வாறே அரசன் செய்து "பொற்கை மாறன்" என்று உலகம் போற்ற வாழ்ந்து வந்தான். குற்றமற்றவருக்கு நேரும் ஆபத்து முடிவில் நன்மையாகவே மாறும்.

சுதந்தர வாழ்விற் சுத்தமுள்ள தெது?

உலகத்தில் ஜனங்கள் தம் தம் வாழ்வைப் பலவாறு நடத்தி வருகிறார்கள். மொத்தத்தில் அவ்வாழ்வுகள் இரண்டு வகைப்படும். ஒன்று சுதந்தரம், மற்றொன்று அடிமை. இந்த இரண்டிலும் அடிமை வாழ்வு கேவலம் இழிவானது. சுதந்தர வாழ்வே உயர்வானது என்று யாவரும் எண்ணுகிறார்கள். இரண்டிலும் தொல்லைகள் இருந்தாலும் அத்தொல்லை அடிமை வாழ்விலிருப்பதுபோல் சுதந்தரத்தில் அவ்வளவு கடினமானதாயில்லை என்பது ஜனங்களின் பொதுவான தீர்மானம். அடிமையில், ஒருவர் பிறருக்கு அடங்கி ஒடுங்கி, அவர்களிடம் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு, காரணம் இருந்தோ இல்லாமலோ, அந்த எஜமானர்கள் சொல்லும் கொடுமையான வார்த்தைகளுக்குக் குறுக்கு வார்த்தை சொல்லாமல், பய பக்தியுடன் நடந்து வர வேண்டும். அவர்கள் மன மகிழும்படி இச்சகமும் பேசித் தீர வேண்டும். காலா லிட்டதை கையால் செய்யவேண்டும்.

எஜமானரென்றால் எல்லாரும் எஜமானராய் விடுவார்களா? கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? பாக்கிய வசத்தால் எஜமானரானவரில் எத்தனைபேர் எஜமா னென்னும் பதவிக்குரிய இலக்ஷணங்களை யுணர்ந்து நடவாமலே டம்பாகாரமான எஜமானராய், பிறர்மெச்ச, தம்பணியாளரை இழிவு படுத்துகிறார்கள்.

அம்மம்ம! அடிமை வாழ்வைவிட மிடிமை (தரித்திர) வாழ்வே மேலானது என்று தோன்றுகிறது. சுதந்தர வாழ்வில் ஒருவன் தன் மனம்போல வாழலாம். கை கட்டிக்கொண்டு எவருக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகவே, இதுவே சுகவாழ்வாகிறது என்று எல்லோரும் கருதுகிறார்கள் ஆயினும், உற்று நோக்கினால், இதிலும் ஊழலில்லாமற் போகவில்லை. எப்படி என்பதை விவரிப்பாம்.—

சுதந்தர வாழ்வு வாணிகம் (வர்த்தகம்) உழவு (பயிரிடுதல்) என இரு பிரிவுபடும். இவ்விரண்டிற்கும் முதல் (Capital) வேண்டும். 'முதலிலார்க்கு ஊதியம் (லாபம்) இல்லை யல்லவா?' முதல் வைத்துக்கொண்டு வாணிகம் செய்வோர் லாப நஷ்டங்களுக் குட்பட்டாக வேண்டியதேயாம்.

" வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவும் தம்போற் செயின் "

என்றார் திருவள்ளுவர். அதாவது பிறரது பொருளையும் தமது பொருள்போல் பாவித்து, கொள்வது மிகுந்தும், கொடுப்பது குறைந்தும் இராதபடி சிறிது லாபம் வைத்துக்கொண்டு வாணிகம் செய்வார்க்கே வாணிகம் பயன்படும். அதிக லாபத்திற்கு ஆசைப் பட்டு அநீதமாக வாணிகஞ் செய்தால், அது லாப மாவதுபோற் காட்டி, அழிவையே உண்டாக்கிவிடும். செட்டியார் என்ன செய்கிறார் என்றால், கொடுக்கலும் வாங்கலுமாக இருக்கிறார் என்பார்கள். ஆனால், "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு" என்கிறபடி முடிவி

லல்லவோ லாப நஷ்டந் தெரியும்? எத்தனை வர்த்தகர் முதலோடு வீடு வாசல் மாடு கன்று ஆடை ஆபரணம் இழந்து வாடி நிற்பதை நாம் காண்கிறோம். "காணி ஆசை கோடி கேடு" என்பது வாணிகர்க் குரிய பழமொழி. ஆகையால் வாணிகத்தில் சுத்தம் ஏற்படுவது அருமையா யிருக்கிறபடியால், சுதந்தர வாழ்வில் சுத்தமுள்ளது உழவே என்று பலர் முடிவு கட்டுகிறார்கள். இதற்கு ஆதாரமாக,

" தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது "
" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் "
" சீரைத் தேடின் ஏரைத் தேடு "
" சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை "

இவை முதலிய மூதுரைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால், உழவுசெய்வோர் பலர், ஓட்டாண்டியாய் விடுவதையும் நாம் பார்த்து வருகிறோம். அதுபற்றியே பெரியோர்,

"ஏரும் இரண்டுளவாய் இல்லத்தே வித்துளதாய்
நீர் அருகே சேர்ந்த நிலமுளதாய்-ஊரருகே
சென்று வர எளிதாய் செய்வாரும் சொல்கேட்
என்றும் உழவே இனிது " [பின்

என்று தமது கருத்தை விரித்துக் கூறுகின்றனர்.

" உழுகிற நாளில் ஊருக்குப்போனால்
அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை"

ஆகையால், சுதந்தர வாழ்விலும் தொல்லையில்லாம லில்லை, யென்றாலும் சுதந்தர வாழ்வில் சுத்தமுள்ளது உழவே என்று நாம் முடிக்கிறோம்.

இந்த இரு வாழ்வின் சம்பந்தமான கதைகளைப் பின்னர் கூறுவோமாக. (வரும்)

இந்திய ஆகாய விமானம்

பூனா இளைஞர் முயற்சி

பூனாவைச் சேர்ந்த ஸ்ரீ. சிவக் ஆர்டிஷர் இரானி என்னும் இளைஞர் மூன்று வருஷ காலம் பிரயாசைக்குப் பின் ஒரு ஆகாயவிமானம் செய்து முடித்திருக்கிறார். அதைக் கொண்டு அவர் பறக்க முயன்று வருகிறார். மோடார் ஸைகில் இஞ்சினை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த ஆகாய விமானம் செய்து முடித்தார். தான் கண்டுபிடித்த விமானம் மணிக்கு 50 மைல் பறக்குமென்றும், 5 மணி நேரம் ஆகாயத்திலேயே இருக்குமென்றும் கூறுகிறார்.

(A friend in need)

ஆபத்தில் உதவிய உத்தமர்

கலைமகள் துதி.

கலைபயின்ற உளத்திருக்குங் கரும்பினை முக்கனியை
யருட், கடலை ஓங்கும்
நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த நான்முகனார்
நீண்ட நாவில்
தலைபயின்ற மறைபயின்று மூவுலகுங் காக்கின்ற
தாயை, வாகைச்
சிலை பயின்ற நுதலாளைக், கலைவாணி அம்மையை நாம்
சிந்திப்போமே!

(திருவருட்பா)

சிறுவர்களே! நான் உங்களுக்கு ஒரு கதை சொல்ல விரும்புகிறேன். சற்றுச் செவி கொடுத்துக் கேளுங்கள் :—

வடதேசத்தில் ஒரு பிரபு இருந்தார். அவருக்கு இரண்டு புதல்வர்கள் உண்டு. இளையவனான கருணாகரன் என்போன் கப்பற் றொழிலில் பயிற்சி யடைந்தான். பிறகு அத்தொழிலிலேயே அவன் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தான். அவனது முயற்சியினாலும், புத்தி சாதுரியத்தினாலும் கப்பல் தலைவனாகி, பல கப்பல துறைமுகங்களை வியாபார நிமித்தமாகச் சென்று பார்வையிடும் உத்தியோகம் பெற்றான். அதிலிருந்து

படிப்படியாக உயர்ந்த பதவிகள் வகித்து, ஏராளமான செல்வங்களைச் சம்பாதித்தான்.

இப்போது நம் கருணாகரன் "முயற்சி மெய் வருத்தக் கூலி தரும்" என்பதற் கிணங்க, உழைப்பி னாலும், ஊக்கத்தினாலும், விடாமுயற்சியாலும், பெருத்த செல்வத்திற்கு எஜமானாய் விட்டதாலும், அவனது ஆயுட்காலத்தில் முக்கால்பாகம் கழிந்து விட்டதாலும், நாம் இனி அவனை 'அவர்' என்று அழைப்போம்.

செல்வர்களே! நம் கதாநாயகருக்கு முதுமைப் பருவம் நெருங்கிவிட்டதாலும், இத்தனை காலம் அன் னிய நாட்டில் தங்கிவிட்டதாலும், தம் சுயதேசம் திரும்பிச் செல்ல மிக்க அவாவடைந்து, தமக்குள்ள பொருள்களைத் திரட்டிக்கொண்டு, தம் தாய் நாடு வந்து சேர்ந்தார். அவருக்குத் தான் பிறந்த பூமியைக் கண்டதும், அளவிலா ஆனந்த முண்டாயது. உடனே தம் சுற்றத்தார்களைக் காண அவர் ஆவல் கொண்டார். அவர்களைப் பற்றி விசாரித்ததில், தான் போகுமுன் நல்லநிலைமையிலிருந்த அவரது தமையன் இறந்து விட்டதாகவும், தமையன் புதல்வி ஒருத்தி, ஒருவனை மணந்து சுகமாயிருப்பதாகவும் கேள்விப்பட்டார். உடனே அவள் வீட்டுக்குச் சென்று அவளைக் கண் டார். அப்பெண்ணும், நெடுநாளாய்த் தூரதேசம் சென்றிருந்த தன் சிற்றப்பன் திரும்பி வந்துவிட்டது கண்டு, மிக்க முகமலர்ச்சியுடன் அவரை வரவேற்று உபசரித்து, க்ஷேமலாபங்களை விசாரித்தாள். கருணா கரரும் தம் தமையன் இறந்துவிட்டதைக் கேட்டு மிக்க வருத்தமுற்றார்; பிறகு அன்னிய நாட்டில் கண்ட விசேடங்களை எடுத்துரைத்து அங்கிருந்து கொண்டு வந்த நூதன வஸ்துக்களில் பலவற்றை அவளுக்குப் பரிசளித்தார். நம் கருணாகரரும் இப்படி பலவிஷ யங்களைப் பற்றி உல்லாசமாய் உரையாடிக்கொண்டி ருக்கும்பொழுது, சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவர்போல், தம் தமையன் புதல்வியை விளித்து, "என்னருமை மகளே, நான் அன்னிய நாட் டிற்குச் செல்லுமுன், உனக்கு 'அமலா' என்ற தங்கை ஒருத்தியிருந்தாள். அவள் யான் நாற்காலியில் உட் கார்ந்திருந்தால் புன்னகையுடன் என் பின்புறம் வந்து, நான் அணிந்திருக்கும் சட்டையைப் பிடித்திழுத்து விளையாடுவாள். அப்பொழுது நானவளை ஆவலோடு ஓடிப் பிடித்து முத்தமிடுவேன். அவள் எங்கேயிருக் கிறாள்? அவளுக்கு ஏதாவது கெடுதல் நேரிட்டிருந் தால், நான் மிக்க வருத்தப்படுவேன்" என்று ஆவ லுடன் கேட்டார்.

அதற்கு அவள் "என தன்பார்ந்த சிற்றப்பா! அவள் இங்கு இல்லை" என்று வருத்தத்துடன் பதில் மொழிந்தாள். அவர் அதற்கு மனம் பதறி "என்ன அவளுக்கு" என அவளது முகத்தை உற்று நோக்கிய வண்ணம் ஆச்சரியத்துடனும், அனுதாபத்துடனும் கேட்டார். அவள் "அந்தோ! துர் அதிர்ஷ்டம் பிடித்த பெண் அவளுடைய பிடிவாத குணத்தினால், யாவராலும்வெறுத் தொதுக்கப்பட்டுத் தரித்திர திசை யிலிருக்கிறாள். அவளை மறந்து விடுதலே நலம்" என் றாள். கருணாகரர் ஆச்சரியத்துடன் "என்ன! அவள்

"தன்னையே அவமானத்திற்குள்ளாக்கிக் கொண்டாளா?" என்றார். அதற்கு அவரது தமையன் புதல்வி "அப்படி ஒன்றும் செய்து விடவில்லை. அவளது மூடத்தனத்தினாலும், அவசரபுத்தியாலும், தனக்குக் கீழான அந்தஸ்திலுள்ள ஒருவனை மணந்து, தனக்கும் தன் குடும்பத்திற்கும் மீளாத தரித்திரத்தையும் துன்பத்தையும் தேடிக்கொண்டாள்" என்றாள். இதைக் கேட்டதும் கருணாகரர் மனம் சற்றுச் சாந்தியடைந்தது. காரியம் ஒன்றும் மிஞ்சிப் போகவில்லையென்று அறியவே, அவர் தனது தமையன் அந்தச் சம்பந்தத்தை எவ்வாறு ஏற்றுக்கொண்டாரென்றும், அந்த மனிதர் யாரென்றும் வினவினார். அவள் "அவன் ஒரு சித்திர வல்லபன். தந்தையின் வெறுப்பிற்குக் காரணமாய் இருவரும் மணந்து, கஷ்டத்திற்குள்ளாயினர். அவரது அந்திய காலத்தில் அவர் அவர்களைப் பராதீனப் படுத்தியதுமல்லாமல், எங்களிடமும் இனி அவளை ஒரு சகோதரியாகப் பாவிக்கக் கூடாதென்று வாக்குறுதி பெற்றுக்கொண்டார்" என்றாள்.

"நீயும் அவ்வாறே வாக்குறுதி தந்தனையோ" என்று மனக் கசப்போடும், ஆச்சரியத்துடனும் கருணாகரர் கேட்டார். பக்கத்திலிருந்த மற்றொரு சகோதரி "அவளைக் காணத் தகுதியில்லாது போனாலும் அநேக தடவைகளில் எங்களாலியன்ற உதவியை நாங்கள் அவளுக்குச் செய்திருக்கிறோம்" என்றாள்.

"சரி, அவள் கதி என்னவாயிற்று. இப்பொழுது எங்கேயிருக்கிறாள்?" என்று கருணாகரர் அவசரப்பட்டார்.

அவள் "அவர்கள் அடிக்கடி குடியிருந்த வீட்டை மாற்றிக் கொண்டிருந்தனர். ஆதலால் தற்போது அவர்கள் வசிக்குமிடம் எங்களுக்குத் தெரியாது. அவர்களைப் பற்றிய விபரம் தெரிந்து ஆறுமாத காலமாகிறது"—என்றாள்.

கருணாகரர் "சரி, அப்படியானால் பழைய விலாசமேனுமிருந்தால் கொடுங்கள்" என்றார். அவர்களும் பழைய விலாசத்தை எடுத்துக் கொடுத்தார்கள். விலாசத்தைப் பெற்றுக்கொண்டதும், கருணாகரர் துரிதமாய் வெளியே செல்லலானார். அப்பெண்கள் "சிற்றப்பா! ஏன் அவ்வளவு அவசரம்? நீங்கள் இங்கு தங்கிச் சற்று இளைப்பாறிப் போகலாம். எங்களது பணியாளனை அனுப்பி விசாரித்து வரச் செய்கிறோம்" என்றார்கள். அவர் அவர்களது பேச்சைத் தடுத்து "என் அருமை மக்களே! நான் செய்யவேண்டுமென்று எண்ணிய காரியத்தை நானே செய்து முடிக்கவேண்டும். அப்படியில்லாது பிறர் கையில் ஒப்புவித்தால், அன்று எனக்கு நித்திரையே பிடிக்காது" என்று பதில் கூறிவிட்டு, துரிதமாய்த் திரும்பிப் பாராமல் போய்விட்டார். அப்பெண்கள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கலாயினர்.

நிற்க, நம் பெரியார் அவ்விலாசமுள்ள வீட்டுக்குச் சென்று விசாரித்ததில் அவ் வீட்டுச் சொந்தக்காரி அவர்கள் அவ்விடத்தை விட்டுப்போய் அநேக நாளாய் விட்டனவென்றும், அவர்களைப் பற்றிய விவரம் ஒன்றும் தெரியாது என்றும் சொல்லிவிட்டாள். ஆனால் மறுபடியும் அவள் ஞாபகப்படுத்தி "அந்தச் சித்திர

வல்லபன் குணசீலன் (அமலாவின் கணவன் பெயர்) ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராக அமர்ந்திருந்தான். அங்கு சென்று விசாரித்தால் அவன் இருப்பிடம் தெரிந்து கொள்ளலா" மென்றாள். கருணாகரர் "மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார்" என்பதற் கிணங்க, அவ்வீட்டுக்காரியிடம் விடைபெற்று, அவ்வுபாத்தியாயரைத் தேடி அவரிடம் இவர்களைப்பற்றி விசாரித்தார். உபாத்தியாயர் "குணசீலன் இங்கு சித்திரவல்லபனாய் இருந்தார். அவர் அதிக ஏழையானபடியால் சரியான உடையணியாமல் வரவே, நான் அவரை வேலையினின்று நீக்கிவிட்டேன். இப்பொழுது நினைத்தாலும் பரிதாபமாயிருக்கிறது. ஏன் அப்படி செய்தோமென்று அதிக வருத்தப்படுகிறேன்" என்றார். இதனைச் செவியுற்ற நம் கருணாகரர் மிக்க கோபமுற்று "சரி, நல்ல வேலை செய்தீர். ஏன் அப்படி செய்தோமென்ற இரக்கங் கொண்ட, நீர் அவர் என்னவானா ரென்றாவது மறுபடி தெரிந்து கொண்டீரா?" என்று கேட்டார்.

"என்னிடம் அவர்கள் பழைய விலாசமிருக்கிறது. இதோ தருகிறேன். சென்று விசாரித்துக் கொள்ளும்" என்று அந்த விலாசத் துண்டை இவர் கையிலிடவே, அவர் பரபரப்புடன் குறித்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அவ்விடு மூன்றடுக்கு மாடி வீடாயிருந்தது. அங்கு யாருமில்லாததால் கடைசிப் படிகளில் ஏறினார். அப்பொழுது இவரது செவியில், தீனக்குரலுடன் "ஐயோ! வீட்டிலுள்ள சாமான்களை யெல்லாம் எடுத்துச் சென்றாய்விட்டதே. கடைசியில் எனக்கும் என் ஏழைக் குழந்தைகளுக்கும் ஒரு படுக்கையாவது

வைத்துவிட்டுச் செல்லலாகாதா" என்ற சப்தம் கேட்டது. அதே சமயத்தில், ஒருவன் இரண்டு மெத்தைகளையும் சுருட்டித் தலைமேல் வைத்துக்கொண்டு, அதட்டின குரலுடன், 'முடியாது' என்று சொல்லிக்கொண்டே, அந்த மாடியின் படிகளின் வழியாய்த் தடதடவென்று கீழே இறங்கினான். உடனே கருணாகரர் அவனை மறித்து "ஏன் அந்தப் பெண்பிள்ளையின் படுக்கைகளை எடுத்துச் செல்லுகிறாய்" என்று கேட்டார். அதற்கு அவன் "நான் வீட்டுக்காரன். வீட்டின் வாடகை கொடுக்காததால் எடுத்துச் செல்லுகிறேன். நான்குமாத வாடகை கொடுபடவில்லை. நாங்கள் என்ன செய்வது" என்று கத்தினான்.

"நான் அவர்களுக்குச் சுற்றத்தான். நான் அவைகளைத் தருகிறேன். மெத்தைகளைக் கீழேவை" என்றார். அவனும் அப்படியே வைத்து, அவனுக்குச் சேரவேண்டிய வாடகையை வாங்கிச் சென்றான். கருணாகரர், மிக்க மெலிவுடன் ஒரு குழந்தையைச் சுமந்து நிற்கும் பெண்பிள்ளையின் அருகில் சென்று அன்புடன் "அம்மா, நீ தானே அமலா என்பவள்?" என்று கேட்டார். அவள் "ஆம், என் பெயர் தான்" என்றாள். "உன் சிற்றப்பா அன்னிய நாட்டிற்குச் சென்றிருந்தானே. அவனைப்பற்றி ஞாபகமிருக்கிறதா?" என்றார். அவளும் "ஞாபகமிருக்கிறது" என்றாள். 'அவனே நான்" என்றார். உடனே அப்பெண் 'ஆ' வென்ற சப்தத்துடன் மூர்ச்சை யடைந்தாள்.

உலகில் அதிகசந்தோஷத்தையும், துக்கத்தையும் மடையும்போது மூர்ச்சையுண்டாவது சகஜந்தானே.

நண்பர்காள்! நம் கருணையுள்ள உத்தமர், அவளருகிற் சென்று, மூர்ச்சை தெளியும்படியான உபசாரங்களைச் செய்தார். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து, ஈனக்குரலுடன் "கடவுளே, நான் என்ன நிலைமையிலிருக்கிறேன்" என்று அமலா வருத்தத்துடன் புலம்பினாள். அதற்கு அவர் "அம்மா இனி பயப்படாதே. கருணைமிக்க கடவுளே உனது துன்பத்தைச் சகிக்காது, என்னை உனக்கு உதவி செய்யும்படி அனுப்பியிருக்கிறார். நிற்க யார் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னை எனது மகள் போல் கருதி உதவி செய்வேன்" என்று அன்புடன் மொழிந்தார். இவ்வார்த்தைகளைக் கேட்ட நம்மடந்தை, வழி தெரியாது தவிக்கும் ஒருவனுக்கு இன்னவழி யென்று தெரிந்து விட்டால் எவவளவு தைரியம் உறுவனோ, அதுபோல் சற்றே திடமடைந்து, 'சிற்றப்பா! நானும் என் கணவனும், குழந்தைகளும் தரித்திரத்தினால் அதிகத் துன்ப முற்றோம். அது நிமித்தமாக என் கணவன் வியாதியுற்று வைத்தியசாலையி லிருக்க நேரிட்டது" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே யுரைத்தாள். அவளது கண்ணீரைத் துடைத்து, "அம்மா, இன்றுடன் உன் கஷ்டங்கள் தீர்ந்து விட்டன. மனிதருக்குச் சிலநாள் துன்பமும் இன்பமும் கலந்தே வருவ தியல்பு. ஆதலால் நீ யாவும் மறந்து என்னை உன் தந்தை என்று எண்ணிக்கொள்" என்று கனிவான குரலுடன் மொழிந்தார். அமலாவும் புத்துயிர் பெற்றவள் போல் தெளிந்து, நன்றியுடன் அவரை நோக்கி "என் பிடிவாத குணத்தினாலும், என் பிதாவின் சொல்லை மீறி நடந்த

தினாலும், அவர் என்னைப் புறக்கணித்து, அவரது பாதுகாப்பினின்று நீக்கிவிட்டதோடு எனது சகோதரிகளையும் பராமுகமாயிருக்கும்படி செய்து விட்டார்" என்று அதிகத் துக்கத்துடன் கூறினாள். கருணாகரர் "கடந்து போனவைகளை நினைத்து வருந்துவதில் பிரயோசனமில்லை. உன் கணவன் உன்னைப் பக்ஷமாய் நடத்தக் கூடியவரா?" என்று கேட்டார். "என தன்புள்ள தந்தையே! என் கணவர் மிக்க நல்லவர். அதிக உழைப்பாளி. எனக்காகவும் என் குழந்தைகளுக்காகவும் அதிசக் கஷ்டப்பட்டார். ஆனால் ஒரு குடும்பம் நடத்தக் கூடிய போதுமான எதுவில்லாததினால், நாங்கள் இந்தத் தசைக்கு வர நேர்ந்தது" என்றாள்.

"அம்மா, எவ்வளவு துன்பமுற்றாலும் உன் கணவன் நல்லவராயிருப்பதும், உங்களுக்காகக் கஷ்டப்பட்டுக் காக்கக்கூடியவராயிருப்பதும் போதும். எனக்கு நேரமாகிறது. உன் கணவனையும் வைத்திய சாலைக்குச் சென்று பார்த்துச் செல்லுகிறேன்" என்றுரைத்து, அன்று போஜனத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்து விடை பெற்றுச் சென்றார்.

நேரே வைத்தியசாலைக்குச் சென்று குணசீலன் என்ற நோயாளியைப் பற்றி விசாரித்ததில், அவன் விடா ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டு மிக்க பலவீனமாயிருப்பதாகஅறியவே, அவன் படுத்திருக்கும் இடத்திற்குச் செல்ல மேல் அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று, "மருந்துகளினால் தீர்க்கமுடியாத நோயை அதிசீக்கிரமாய்க் குணப்படுத்தக் கூடிய மருந்தொன்று நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்று வைத்தியரிடம் இயம்பிக் குணசிலன் படுத்திருக்கு மிடத்தை யடைந்தார்.

அவன் மிக்க பரிதாபகரமாய்க் கண்களை மூடிக்கொண்டு படுக்கையோடு படுக்கையாய் அதிக மெலிவுற்றுப் படுத்திருந்தான். நண்பர்களே! பார்த்தீர்களா தரித்திரத்தின் கொடுமையை! கருணாகரர் அருகில் சென்று இரக்கத்துடன் மெதுவாய் அவனைத் தொட்டுப் பார்த்தார். உடனே அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அவர் "ஐயா, நான் உமக்கு ஓர் அன்னியன். ஆனால் உமது குடும்பத்தைப் பற்றிய நல்ல சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார். அவன் திடுக்கென்று கண்களை விழித்து அவரை ஏற இறங்கப் பார்த்தான். அவனை மறுபடியும் "ஐயா, உன் மனைவியின் சுற்றத்தான் ஒருவன் அந்நிய நாட்டுக்குச் சென்றிருந்ததை நீர் கேள்வியுற்றிருக்கலாம். அவன் திரும்பி வந்து விட்டான். அவன் தான் நான்" என்றதே, குணசீலன் ஆவலோடு கைகளை நீட்டினான். இவரும் அவைகளை ஆவலோடு பிடித்துக் குலுக்கினார். பின்பு குணசீலன் கண்கள் பிரகாசிக்க அவரை நோக்கி "கடவுள் உம்மை ஆசிர்வதிக்க வேண்டும். என் மனைவி அமலாவைப் பக்ஷமாய்ப் பார்த்துக் கொள்ளும்" என்ற இவ்வார்த்தைகளைத் தான் அவனால் சொல்ல இயன்றது. அவர் "நான் உங்களுக்கெல்லாம் ஒரு தந்தையைப் போலிருப்பேன். சந்தோஷமாயிரு. தைரியத்தைக் கைவிடாதே. யாவும் நன்மையாக முடியும்" என்று பதில் இயம்பி, அம்மனிதனுடைய பாதிப் பிணியைத் தீர்த்து அகன்றார்.

கருணாகரர் தம் இல்லமேகி, உணவு முடித்துப் படுக்கைக்குச்சென்று அன்று முழுதும் இயற்றிய நற்கருமங்களை நினைத்து இன்பக்கனவு கண்டுகொண்டே துயிலுற்றார். சிறுவர்களே! பார்த்தீர்களா! நற்காரியங்கள் செய்வதினால் எவ்வளவு மனத்திருப்தியும் சந்தோஷமும் உண்டாகின்றன. அதுபோல் தீய காரியங்கள் செய்வதினால் எவ்வளவு மனச்சஞ்சலமுண்டாகுமென்று நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

மறுநாள் ஒரு வசதியான வீட்டை அமர்த்தி, அமலாவின் வீட்டிற்குச் சென்று, அவள் கணவனது நிலைமையைப் பற்றித் தெரிவித்து, பின்பு அமலாவையும் குழந்தைகளையும் புதிய உடைகள் வாங்கியளிக்க, கடைக்கு வண்டியில் அழைத்துச் சென்றார். ஒரு கடையில் அவர்களுக்கு வேண்டிய துணிகளை வாங்கிக் கொடுத்தார். பிறகு எல்லோரையும் புதிதாய் அமைத்த வீட்டின் மாடிக்கு அழைத்துச் சென்றார். அவ்வீட்டின் வசதியையும், ஒழுங்கையும், அழகையும் கண்டு யாவரும் பிரமித்து விட்டார்கள். அங்கு போடப்பட்டிருந்த ஆசனங்களில் அமலாவையும், குழந்தைகளையும் அமரச்செய்து, நமது காப்டன் கருணாகரர் "என தருமை மகளே! இது உனது இல்லம். நான் இனி உன்னை அடிக்கடி வந்து பார்த்துச் செல்ல அனுமதியளிப்பாயென்று நம்புகிறேன்" என்றார். அமலாவின் முகம் வெளுத்தது. பேச நாவெழவில்லை. கண்களில் நீர் ததும்ப அவர் பாதத்தில் விழுந்து தனது நன்றியை அறிவித்தாள். சட்டென்று

அவர் அவனைத் தூக்கிவிட்டு, குழந்தைகளையும் முத்தமிட்டு அவள் கையில் ஒரு பை பணம் அளித்து, துரிதமாய் வீட்டை விட்டு ஏகினார்.

நேரே வைத்திய சாலைக்குச் சென்று, குணசீலன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, முகத் தெளிவுடன் உணவருந்திக்கொண்டிருக்க அவர் கண்டார். இவரைக் கண்டதும் "ஐயா, இப்பொழுது தான் கனவல்ல, யாவும் உண்மையெனத் தெரிகிறது. உமது உருவம் இரவு முழுவதும் என் கண்முன் தோன்றிக் கொண்டிருந்தது. இன்றுதான் மனச்சாந்தியுடனும் பிரியத்துடனும் நான் சாப்பிடுகிறேன். அமலாவும் என் குழந்தைகளும் எப்படியிருக்கிறார்கள்?' என்று வினவினான்.

" அவர்கள் சந்தோஷமாகவும் சுகமாகவுமிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நீர் அவர்களைக் காண்பீர். கடவுள் உம்மை ஆசீர்வதிக்க வேண்டும்" என்றார். சில நேரத்தில் வைத்தியர் அவ்விடம் வந்து நோயாளியின் நாடியைப் பிடித்துப் பார்த்ததும், ஜுரம் முற்றும் குணமடைந்திருக்கக்கண்டு "ஏது ஐயா! நீர் கைதேர்ந்த வைத்தியரா யிருக்கிறீர். ஒரு நாளில் இவருடைய நோயைப் போக்கி விட்டீரே" என்று கருணாகரரைப் பார்த்துக் கூறினார்.

பிறகு அவர் குணசீலனை மெல்ல வண்டியில் வைத்து வீட்டுக் கழைத்துச் சென்றார். அவன் வருகையை நோக்கி அவன் மனைவி மிக்க குதூகலமடைந்தாள். வீட்டிற் கொண்டுவந்து வசதியுடன் அவனைப் படுக்கையில் விடுத்ததும் அவனுக்கே அப்போதிருந்த

தன் நிலைமையை நம்பமுடியவில்லை. சிலநாளில் அமலாவின் பணிவிடைகளாலும் உழைப்பினாலும் அவனது கணவன் முற்றும் குணமடைந்தான். அவளும் குழந்தைகளும் நல்ல சௌக்கியமும் சந்தோஷமும் உள்ளவர்களானார்கள். ஆபத்பந்துவாகிய அமலாவின் சிறிய தந்தை அடிக்கடி அவர்கள் வீட்டுக்கு வந்து அவர்களுக்குப் பின்னும் சந்தோஷத்தையும் சௌக்யத்தையும் உண்டு பண்ணிக் கொண்டிருந்தார். குணசீலனுக்கும் நல்லதொரு உத்தியோகம் செய்து வைத்தார்.

நிற்க, நண்பர்களே! எல்லா உயிரும் இன்புற்றிருக்க மனங்கொண்ட நம் பெரியார் தமது தமையன் மக்களையும் மறந்து விடாது, அவர்களுக்கும் உதவி புரிந்துகொண்டு ஒரு சஞ்சீவிபோல் விளங்கினார். சிறுவர்களே! நம் கருணாகரர், அமலாவின் குடும்பத்திற்கு உதவிசெய்யாவிடில், அவள் எவ்வளவு துயருற நேரும்! அவரது உதவியில்லாவிடில் அந்த ஏழைக்குடும்பம் இருந்தவிடம் தெரியாமற் போயிருக்குமல்லவா? ஆகையால் மக்களாய் ஜனித்தவர்கள் பிறர் கஷ்டங்களைக் களைந்து உதவி புரியும்படியான மனமுடையவர்களா யிருத்தல் வேண்டும். இச்சிறு கதையில் இன்னுமொரு படிப்பினையும் தெரிந்து கொள்ளலாம். பெரியோர் வார்த்தை கேளாததால் அமலா அவ்வளவு கஷ்டப்பட நேர்ந்தது. ஆகையால் சிறுவர்களாகிய நீங்கள் " மூர்த்தோர் சோல் வார்த்தை அமிர்தம்" என்பதையும் அறிவீர்களாக.

J. C. Meenachi Ammal.

அற்பர் வாழ்வால் குணம் வேறுபடுதல்

அற்பர்க்கு வாழ்வு சற்றதிகமானால் விழிக்
 கியாவர் உருவுந் தோன்றிடா (து),
அண்டிநின்றே நல்லவார்த்தைக ளுரைத்தாலும்
 அவர் செவிக் கேறிடாது.
முற்பக்ஷம் ஆனபேர் வருகினும் வாருமென
 மொழியவும் வாய் வராது
மோதியே வாதப் பிடிப்பு வந்ததுபோல
 முன்காலே அகல வைப்பார்
விற்பனமிகுந்த பெரியோர் செய்தி சொன்னாலும்
 வெடுவெடுத் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
 விழும்போது தீருமென்பார்
கற்பதுமைபோலவே நலம்பொலம் எதுவரினும்
 கலங்காமல் நிற்றல் குணமாம்
கல்வியில் அனுதினமும் கடிகிவளர் மைந்தனே
 காண்க என்னுரையை மதலாய்.

(மதலைச்சதக)

பாதிவிருத்தியம்

"கொழுநனுண்ட பின் தானுகர் கொள்கையும்,
விழிதுயின்ற பின் துஞ்சலும் மென்துயி
லெழுதன் முன்னம் எழுதலு மேயன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே"—

பதியைத் தெய்வமாகக்கொண்டு அவரைப் பூஜிக்கும் விருதமே "பாதிவிருத்யம்" என்று சொல்லப்படும். அவ்விருதத்தை அனுஷ்டிக்கும் ஸ்திரீகளே பதிவிருதைக ளெனப்படுவார்கள். நமது சரித்திரங்களில் சாவித்திரி, அநஸூயை, சீதை, திரௌபதி, கண்ணகி முதலிய கற்புக்கரசிகள் கற்பின் மகிமையால் தாங்கள் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமில்லையென நன்கு காட்டி யிருக்கின்றார்கள். அப்புண்ணிய சரித்திரங்களைப் படித்தவர்களும் கேட்டவர்களுமாகிய ஒவ்வொரு ஸ்திரீகளும் அவ்விதமே அவ விருதத்தைக் கைக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுவே ஸ்திரீகளுடைய தர்மம்.

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" பரபுருஷர்களை ஏறிட்டுப் பார்க்காததினால் மட்டும் ஸ்திரீகள் கற்புள்ளவர்களாய் விட முடியாது. கணவனை மனப்பூர்வமாக நேசித்து அவன் சொற்படி நடப்பவர்களே பதிவிருதைகளாவார்கள். கணவன் சொல் கடவாததே கற்பாம். கற்பிற் சிறந்த பெண் முன்னிலை

யில் ஆபாஸ எண்ணமுள்ள எந்த ஆண்பிள்ளையும் தைரியத்துடன் நிற்கவும் பேசவும் மாட்டான். மிக ரூபவதியாயும், அளவற்ற ஆடையாபரணங்கள் பூண்டு, கண்டோரைப் பிரமிக்கச் செய்யும் முக காந்தியுடையவளா யிருந்தாலும், நடத்தையில் குறைந்தவளாயின் அவளை எல்லோரும் ஏளனமாயும், எளிதாயும் பேசுவார்கள். உருவில் குறைந்திருந்தாலும் உத்தமியானால் பழிப்புக் காளாகாள். யாவரும் பூஜிக்கத் தகுந்தவளாவாள். ஸ்திரீ ரத்தினங்களுக்குக் கணவனே உயிர், நிதியம், எல்லா பாக்கியமுமாம். கற்புக்கரசிகளின் மொழிகளாவன:—

1. "துரத்திய என்னை இன்னும் அழைத்திலராயினும் அவர் தழைத்த காதலர்."

2. "மணந்த மங்கையாம் என்னை மறந்தனராயினும் அவர் என்னை மருவிய மணாளர்."

3. நலங்கெட வென்னை விடுத்தனராயினும் அவர் என்றும் என்னுயிர் நாதர்."

4. "அவதிகள் பலவே நான்படப் புரிந்திடினும் அவர் என் அன்பர்."

5. "சீறினும், என்னை அடித்திடினும் அவர் என்றன் சீராளர்! கற்பின் காவலர்."

6. "அகிலத்து வாழ்க்கையில் ஆதரவாய் நிற்கும் என் ஆருயிர்த் துணைவர்"

7. "தாழ்வு எத்தனை நான் எய்திடினும், அவர் வாழ்வுக்கே என்றன் துதி."

8. "அவரே என் ஆவி, அவரே என் இன்பம், அவருக்கே என் கற்பு சொந்தம். அவர் வாழ்க".—

ஸ்திரீகள் மேற்கூறிய மொழிகளை நன்கு அறிந்து அதன்படி நடப்பதே நலம்.

"நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம் விதியின் பயனே பயன்" ஆகையால், தனக்கு வாய்த்த கணவன் துஷ்டனோ நல்லவனோ அவனை அலக்ஷியம் செய்யாது அவன் வறுமையிலும் பெருமையிலும், அவனுக்கு உற்ற துணையாகவும், உயிர்க் காதலியாயு மிருந்து அவனை உபசரித்து அவனிஷ்டம் போல் நடந்து கொள்வதே உத்தம ஸ்திரீகளின் லக்ஷணமாகும். கணவன் பாபகர்ம முள்ளவனாயிருப்பினும் மனைவி நற்கருமமுள்ள வரையில் தன்மட்டுமல்ல - நாயகனுடன் நல்வழி அடைவாள். நன்னெறி தவறிய ஆண்மகன் திருந்துவானானால் அவன் எங்கும் யாராலும் ஏற்றுக்கொள்ளப்படுவான். எப்பொழுதேனும் ஒரு முறை ஒழுக்கம் தவறிய பெண் ஒருகாலும் யோக்கியதை யுள்ளவளாய் எண்ணப்படாள்.

தன் கணவன் நடவடிக்கைகளில தனக்கு வெறுப்புண்டானாலும் அது அவனுக்குத் தெரிவிக்கப்படாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். பரபுருஷர்களைப் பற்றியும், அவர்களுடைய குணாதிசயங்களைப் பற்றியும் புருஷன் முன்னிலையில் கூறலாகாது. நாம் கெட்ட எண்ணமின்றி யிருந்தாலும், இவளுக்கு அவர்கள் மேல் இஷ்டமோவென்று அவனுக்கு ஐயமுண்டாக அது வழியாகும். கணவனின் முகக்குறி யறிந்து

அவன் இன்பமாய்ப் பேசினால் நாமும் அப்படியே பேச வேண்டும். கோபித்தால் பதில் உரைக்காமலிருத்தலே அவன் கோபத்தைத் தணிக்கும் வழியாகும். கணவனை நேசித்து அவனுடன் மரியாதையாயிருந்து, அவன் ஸ்வபாவங்களை நன்கு கவனித்துத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தவாறு நடக்கவேண்டும்.

'ஒத்து வாழாக்குடி ஒரு நாளும் விடியாது' என்றபடி, குடும்பக் காரியங்களில் கணவனுடன் ஒற்றுமையாயிருந்தால் இகலோகத்திலும் சுகப்பட்டு, பரலோக சுகத்தையும் அடையலாம். புருஷர் வீட்டிலில்லாத நேரத்தில் சிநேகிதர்களாவது அதிதிகளாவது வந்தால் அவர்களுக்கு உபசரணை செய்தல் வேண்டும். பர்த்தாவினுடைய கோபமான காலங்களில் மௌன நிலையாலும் ஹிதமான வார்த்தைகளாலும் கோபசாந்தி பண்ணவேண்டும். அவர் கவலைப்படும் காலங்களில் என்ன கவலையெனக் கேட்டு, அக்கவலையில் தானும் கலந்துகொண்டு அவருக்குத் தைரியம் புகன்று ஊக்கமூட்டவேண்டும். அவரிடம் காட்டும் அன்பைப் போலவே அவரை ஈந்தருளிய அவருடைய தாய் தந்தையர்களிடமும் அன்பு காட்டவேண்டும். பெண் ஜென்மத்தை அவருக்கு ஊழியம் செய்வதில் உபயோகித்து உன்னதமுடையதாகச் செய்துகொண்டு நடப்பவள் இகத்தில் பரம க்ஷேமத்தை அனுபவித்துப் பரத்தில் ஸ்வர்க்க போகங்களையும் அனுபவிக்கிறாள் என்பது நிச்சயம். ஆகவே எல்லோருக்கும் இனிதே விளைத்திடுக! யாவருக்கும் நலமே நாடுக!

விடுகதைகள்.

1. "காலையில் கோட்டை கட்டி, கடும்பகல் யுத்தம் செய்து மாலையில் பிரித்துப்போடும் மல்லரிவர் யார்?" (வண்ணான்)

2. "காலில்லை, கையில்லை, கண்கள் உண்டு, வாயுண்டு, சிறகுண்டு, வலுவான ஓட்டமுண்டு, வானத்திலும் பறவாது, பூமியினில் நடமாடாது. வகையாக உரைத்திடுவீர் உண்மை கண்டே" (மீன்

3. "வீட்டிலிருக்க வேண்டியது ஒன்று. அது இருந்தால் எது இல்லாவிட்டாலும் எல்லாம் உண்டு அது இல்லாவிட்டால் எது இருந்தும் ஒன்றுமில்லை." (நற் பெண்டீர்)

4. "எல்லாமிருந்தும் ஒன்றில்லாதிருந்தால் எவருக்கும் இன்பம். அது இருந்து எல்லாமிருந்தாலும் துன்பம். அது என்ன?" (வியாதி)

5. "காலிரண்டு கோணக்கால் கண்ணிரண்டு கன்னியர்க்கு மோதிரமாம். விரலிரண்டில் எதிரிரண்டு முதலை போல் வாய் திறந்து மூடுங் கண்டீர். இதமின்றிக் கண்டித்துத் துண்டிக்கு முதடு முண்டு. இதை யறிந்து உரைத்திடுவீர் இனிதாய்த் தானே" (கத்தரிக் கோல்)

6. 'வட்டமுகம் கொண்டிருப்பான் கண்களுண்டு வரிசையாய்ப் பல்லிருந்தும் கடிக்கமாட்டான். திட்ட

முடன் கொம்பு இரண்டு முட்டாள் மங்கை. திரை கடல் மேல்வந்தவள் தான் தினமே பார்ப்பான். கட்டழகி வெளுத்த முகம், கலைத்தே போவான். கணக்கறிந்து உணவளித்தால் கடப்பான். மெத்த மட்டில்லாமல் வயிற்றைப் பெருக்கிக் கொள்வான், மானிடரே இதை யறிந்து வழுத்துவீரே.'' (கடியாரம்)

7. 'சின்னஞ்சிறுக்கி, சித்திரக் கெம்பு மேனி, என்னேரமும் நின்றபடியே இருப்பாள். உண்பது தவிர உறங்குவதில்லை. என்ன தின்றாலும் உள்ளே குடலுமில்லை, கொழுப்புமில்லை. மேலே சதையுமில்லை எலும்பு மில்லை; சோதித்துப் பார்த்தால் தோலே தவிர வேறில்லை.. தோகை மயிலே'' (மூட்டுப்பூச்சி)

8. "வெள்ளைக்காரன், ஒரு கள்ளப் பையன். நான் காணும் பொழுது செய்யாத கோரணிகளெல்லாஞ் செய்கிறான். நான் சிரித்தால் சிரிக்கிறான். கோபித்தால் கோபிக்கிறான். அடிக்கப் போனால் அடிக்க வருகிறான். அடா வென்றால் சும்மா விருக்கிறான். (முகம் பார்க்கும் கண்ணாடி)

மாதர் கல்விக்கு 2,000 பவுன்

சமீபத்தில் வைசிராய் லார்டு இர்வினும் அவரது மனைவியும் ஹதராபாத் சமஸ்தானத்துக்கு விஜயம் செய்ததை யொட்டி நிஜாம் 2,000 பவுனுக்கு ஒரு உண்டியலை லேடி இர்வினுக்கு அனுப்பி, அவர் இஷ்டப்படும் தர்மத்துக்கு அதைச் செலவிடலாமென அறிவித்தார். லேடி இர்வின் அத்தொகையை இந்திய மாதர் கல்வி நிதிக்குக் கொடுத்துவிடத் தீர்மானித்துவிட்டார்.

ஹாஸ்யம்

ஓர் ஊரில் ஒரு எளிய பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் சாந்த ஸ்வபாவமுள்ளவன். அவனுடைய மனைவியோ அதிக வாயாடியாகவும் இன்னும் மற்றுமுள்ள குணங்களில் இவனுக்கு நேர் விரோதமானவளாகவும் இருந்தாள். அவள் எப்பொழுதும் தன் கணவனுடனும் மற்றுமுள்ள அண்டை வீட்டுக்காரர்களுடனும் ஓயாமல் வாயாடிக்கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தபடியால், அவளை அவ்வூரிலுள்ளோரெல்லாரும 'வாயாடி வாலாம்பாள்' என்று கூப்பிடுவது வழக்கம். இப்படியிருக்க அவள் ஒருநாள் திடீரென்று தேக அசௌக்கியமாயிருக்க நேர்ந்தது. அச்சமயத்திலும் தன் கணவனை வாயில் வந்தபடியெல்லாம் அவள் தூஷித்து உடனே டாக்டரை அழைத்து வரும்படி சொன்னாள். அவனும் அவளுடைய ஹிம்சை பொறுக்க மாட்டாமல் டாக்டரை அழைத்து வந்து காண்பித்தான். அவர் ஆங்கில வயித்தியராகையால் ஜ்வரம் எவ்வளவு 'டிகிரி'' இருக்கிறதென்று பார்ப்பதற்காக 'தர்மா மீட்டரை' அவள் நாக்கின் அடியில வைத்து இரண்டு நிமிஷம் வாயை மூடிக்கொண்டிருக்கும்படி சொன்னார். அதைக் கேட்ட பிராமணன், டாக்டரைப் பார்த்து "ஐயா! பத்து நிமிஷம் வாயை மூடும்படி செய்யும 'தர்மா மீட்டர்' தங்களிடமில்லையா?" என்று கேட்டான். அதற்கவர் "அப்படி ஒன்றுமில்லை" யென்று சொல்ல, பிராமணர் "அப்பொழுதாவது என் மனைவி சற்று வாயை மூடுவளோ பார்க்கலாமென்று நினைத்துக் கேட்டேன்" என்றான்.

பயாஸ்கோப் காக்ஷி.

என்னே ஈதென வியக்கத்தக்க அதியற்புத அலங்காரங்களுடனும் மூன்றடுக்கு மாடிகளுடனும் கூடிய ஒரு பெரிய வீட்டு மூன்றாவது மாடிக் கூடத்தில் ஒருநாள் இரவு எட்டுமணி சுமாருக்கு வழக்கம்போல் போஜனம் செய்துவிட்டு வக்கீல் வரதராஜ சர்மா தமதாசனத்தில் உட்கார்ந்து தமது வேலையிற் சிலவற்றைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

வரதராஜ சர்மாவுக்கு மாதம் ஒன்றுக்குச் சுமார் 4000 ரூபா வரும்படி வரும். குமாஸ்தாக்கள் நான்கு பேருண்டு. மனைவியர் இரண்டுபேர். மக்கள் ஆணும் பெண்களுமாக எழுவர். வேலையாட்கள் இருவர். இவ்வளவு சௌகரியங்களை அநுபவிக்கப் பிறந்த வரதராஜ சர்மா இன்று இவ்வேளை போஜனகால மாகையினால் மற்றவர் போஜனஞ் செய்யுமாறு செல்லவும் இவர் தனியே இருக்கவும், நாம் கவனிக்கவும், உங்களுக்குச் சொல்லவும் நமக்கு இடங்கொடுத்தார்.

இவர் தமது காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கையில் வாயில்காப்போன் வந்து "நான்குபேர் பெரிய மனிதர்கள் வந்திருக்கிறார்கள். ஏதோ வழக்கு விஷயமாகப் பேசவேண்டுமாம்" என்று சொன்னான். வக்கீல் "வரச்சொல்" எனச்சொல்லியனுப்பித் தமது தொந்தியை உடுப்பணிந்து மறைத்துக்கொண்டு அந்த நாற்காலியை விட்டெழுந்து சாய்ந்த நாற்காலியிற்

படுத்துக்கொண்டு கையில் "இந்து"ப் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டார். இதற்குள் அவர்கள் வந்து வணங்க, சர்மா அவர்களை வரவேற்று வீற்றிருக்க உபசரித்து "யார்? விசேஷமென்ன?" என்று வினவினார். அவர்களில் ஒரு முண்டன் ஒரு கடிதத்தை நீட்டினான். அதனை வாங்கி வக்கீல்—இவர்கள் பெரிய பிரபுக்கள். என் நண்பர்கள், ஒரு பெரிய வழக்கில் அகப்பட்டுக்கொண்டமையினால் உமது உதவியை நாடுகின்றனர். இவர்களிடம் என்னிடம் வைக்கும் அன்பு வைத்து வேண்டிய உதவி புரியவேண்டுகிறேன். இங்ஙனம்-தங்கள் அன்பன்-சித்திரரத்தினம்- என எழுதியிருக்கக் கண்டு, "ஓ அப்படியா! நல்லது" என்று எழுந்தார்.

இப்போது, இன்னொரு முண்டனெழுந்து கைத்துப்பாக்கியை நீட்டி! "இதோபார்! இதுதான் வழக்கு" என்றான். இன்னொருவன் வக்கீலின் வாயைப் பொத்திப் பிடித்துக்கொண்டான். இன்னொருவன் அக்கூடத்துக்குரிய கதவுகளைத் தாளிட்டான். மற்றவன் "வாய் பேசப்படாது; கத்தப் படாது; மூச்சு விட்டால் துப்பாக்கி பாய்ந்துவிடும் மார்பில்! பேசாமல் விரைவில் நேற்றுச் சங்கரலிங்க நாட்டாரிட மிருந்து வாங்கிய முப்பதினாயிரம் ரூபாயையும் எடுத்துக் கொடு. நீ செய்த கொடுமைக்கு உன்னைச் சித்திரவதை செய்ய வேண்டும். அக்கொடுமையை மகாபாவி யாகையினால் நீ துணிந்து செய்தாய். அதற்குத் தண்டனை இது தான். எடு பணத்தைத் தாமதியாதே!" என்றான்.

இப்போது வக்கீலின் வாயைப் பொத்திக்கொண்டிருந்தவன் கையை எடுத்துக்கொண்டான். வக்கீலின்

தேகம் ஆவேசமடைந்தவன் உடலைப்போல் நடுங்குகின்றது. பிர்மஹத்திக் கணக்காய் விழித்துக்கொண்டே விரைவாய் நடந்து டிரங்கைத் திறந்து நோட்டாகவிருந்த ரூபா முப்பதினாயிரத்தையும் அவர்களிடம் கொடுத்தார். அவர்களில் ஒருவன் அங்கிருந்த ஒரு கண்ணாடி பீரோவைக்காட்டி "இதைத் திற" என்ருன் வக்கீல் மயங்கினர். "அவன் திற சீக்கிரம்"என, வக்கீல் கோர்ட்டில் காட்டும்பரப்பை இங்கும் காட்டி அதைத் திறந்தார். அவர்களில் ஒருவன் அந்தப் பீரோவின் குறுக்குப் பலகைகளை எடுத்துவிட்டு அதற்குள் வக்கீலை அடைத்துக் கதவுகளிரண்டையும் சாத்திப் பூட்டிக்கொண்டான். பின் "வாய் பேசாதே"என்று ஒருவன் துப்பாக்கியைக் காட்டிக்கொண்டே பின்பக்கமாய் நடக்க, மற்றவர்கள் அவனுடன் நடந்து கதவைத்திறக்க கால் வரும் வெகுவேகமாய் வெளிப்பட்டனர். ஒருவன் அங்க் கூடத்து முன்கதவைத் தாளிட்டுத் தன்னிடமிருந்த பூட்டைமாட்டிப் பூட்டிவிட்டு "உம்" என, கால் வரும் ஒரு நொடியில் கீழே வந்து தெருவிலிருந்த மோட்டாரிலேறி மாயமாய்ப் பறந்துவிட்டனர்.*

வக்கீல் ஐந்து நிமிஷம் வரையில் பிதிபிறால் சும்மா விருந்துவிட்டுப் பின் கூவினர். கண்ணாடிக்கதவிற்குள் அகப்பட்டுக்கொண்டமையினால் அவர் கூவிய குரல் ஒருவர்க்கும் கேட்கவில்லை. அவ்வக்கீல் ஒரு சமயம் நம்மையும் ஏமாற்றிவிட்டபடியால், நாமும் அவரிடம் கருணைகாட்டாமல் "நீர் எத்தனை பேர்களைக் கோர்ட்டில் கூண்டிலேற்றி அழகு பார்க்கிறீர்! கண்ணாடிக் கூண்டிலிருக்கும் உம்மை உம்முடைய மனைவி, மக்கள், வேலையாட்களெல்லாரும் பார்த்து மகிழட்டும்" என்று அவ்விடம் விட்டு மறைந்து விட்டோம். (பாலவிநோதினி)

"வந்தே மாதரம்"

(1) ஆரிய மென்ற பெரும்பெயர் கொண்டவெம்
மன்னையின் மீது திகழ்
அன்டனு மென்கொடி வாடிய காலை
யதற் குயிர் தந்திடுவோள்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே.
யானுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.
வீரிய ஞான மநம்புகழ் மங்கிட
மேவி நலா ரியரை
மிஞ்சி வளர்ந்திடு புன்மையி ருட்கணம்
வீவுற லங்கமகா
வாரிதி மீதிலெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே.
வாழிக லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.

(2) காரடர் யென்முடி வானி மயந்தரு
கங்கை வரம் பினிலும்
*கன்னியை வந்தொரு தென்றிசை யார்கலி
காதல் செயாயிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புனை முதல்
வேறுள ஊர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
வியந்திடு மந்திரமும்,
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரமும்,
பாதக ரோதினு மேதக வுற்றிடு
பண்புயர் மந்திரமும்,
வாரமுறுஞ் சுவை யின்னற, வுண்கனி,
வான மருந்தெனவே
மானுயர் பாரத தேவி விரும்பிடும்
வந்தே மாதரமே.

* கன்னியாகுமரி.

C. சுப்பிரமணிய ப

ஜீவகாருண்யப் பாக்கள்

அண்ணமாரே !

("நந்தலாலா" என்ற மெட்டு)

கொலையும் புலையும் வேண்டாம் அண்ணமாரே
பலியும் பாவமும் வேண்டாம் ,, ,,
ஆண்டவ னொருவ னன்றோ ,,
அன்பும் அருளு மன்றோ ! ,,
எள்ளுக்குள் எண்ணெ யென ,,
எங்கு மிருப்ப வனே ,,
ஆட்டிலுங் கோழியிலும் ,,
ஆருயிராய் நிற்பவனே ,,
யாரை வருத்திடினும் ,,
அவனை வருத்துவதாம் ,,
துன்பம் பிறர்க் கிழைத்தே ,,
தொந்தி வளர்த்தல் நன்றோ ,,
இரக்கம் மனிதர் குணம் ,,
இரக்கமற்ற பாவிகளோ ! ,,
ஆட்டைநீ ரறுக்கும்போது ,,
அவ்வுணர்வை யேனுணரீர் ,,
கோழியைநீ ரறுக்கும்போது ,,
குற்றத்தை யேனுணரீர் ,,
பாவம் பழி யல்லவோ ,,
பதைபதைக்கக் கொலைபுரிதல் ,,
நோவுந் துயர் பிணியும் ,,
நம்முடலை வாட்டிடுமே ,,
அன்பும் வடிவ மன்றோ ,,
ஆண்டவன் சக்தி யெல்லாம் ,,
துன்பப் படைப்புகளுக் கண்ணமாரே ! ,,
துன்பமே தந்திடுவாள் அண்ணமாரே
(கொலை)

பலி ஏன் ?

(நொண்டிச்சிந்து)

வயிற்றில்வலி வந்தானால்—சற்று
வாயி லெடுத்தொரு மயக்கமிட்டால்
ஆட்டா சாமி யென்பார்—அங்கு
அஞ்சிரண்டுந் தெரியாத் பேர்வழிகள்
பூசையொன்று போடவேண்டும்—அதனால்
குணமாம் வயிற்றுவலி மயக்கமென்று
கூறியே ஆடுகின்றார்—இதனைக்
குறியெனக் கொண்டு சில மானிடர்கள்
வாயிலாப் பிள்ளைகளாம்— ஆடுகளை
வரிசை வரிசையாய்ப் பிடித்துவந்து
கொடுத்திடு பலியென்பார்—தண்ணீர்
குறுகுறு வென்னமே உடலசைத்தால்
ஆவெனத் தான்மடக்கி—அதன்மேல்
அஞ்சாமல் யமதூதர் போலேறி
கத்திகொண்டு கழுத்தறுப்பார்—இந்தக்
காட்சியினைப் பார்ப்பதும் பெரும்பாவம்
கழுத்தினை முறித்தறுக்க—அவைகெட்ட
காரியங்க ளேதேனுஞ் செய்ததுண்டோ ?
மக்களுக்குத் தீங்குசெய்து—ஆடுகள்
மாறாட்டஞ் செய்தகதை கேட்டதுண்டோ?
தேங்காய் பழமில்லையா—நல்ல
தேனுடன் சர்க்கரை பாலில்லையா?
வேண்டுமட்டு நிறையவைத்து—சுவாமியை
வேணுமட்டுங் கும்பிட்டால் போதுமையா.

பலி கொடுக்காதே

(ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு)

பல்லவி

பலி கொடுக்காதே—அப்பா
கொலை புரியாதே.

அனுபல்லவி

ஆடு பலிகொடுத்தால்,
அத்தனையும் பாவமடா
கேடு விளையுமடா
கெட்ட பழக்க மடா (பலி

சரணம்

பாவங்கொலை யல்லவோ,
படுநரக வழி யல்லவோ,
நோவு விளைத்திடலே
நூறு நர கல்லவோ? (பலி)
சக்தியன்னை மைந்தரடா
தங்கும் உயிர்க ளெல்லாம்
குத்திக் கொலை புரிந்தால்
கோபங் கொதிப்பளடா, (பலி)
பஞ்சா அமிருதமும்
பழந்தேங்காய்ப் பாலமுதும்
நெஞ்சன்புடன் படைத்தால்,
நினைத்தபல னுகுமடா. (பலி)

அன்னை வருந்துதல்

(நொண்டிச்சிந்து)

யாரிங்கு பலியிடுதல்—பாழும்
அறிவிலிகாளது படுகொலையே ! (யார்)
உயிர்களி னன்னை யடா—எனக்கு
உயிர்க்கொலை தருவது பாவமடா (யா)
இரக்கமென் னிதயமடா—இந்த
இரத்த பலிகண் டுள்ளம் பதைக்குதடா ! (யா)
வதைத்திடல் பாவமடா—நரக
வாயி லுனைத்திறந்து விழுங்குமடா ! (யா)
எவ்வுயிர்க்கும் உயிராய்—எங்கும்
இருப்பவள் என் மனம் பதைக்குதடா (யா)
தாய்மனந் துடிக்குதடா—ஐயையோ !
தாங்கிலேன் ! சேய்களின் தலையறுத்தல் (யா)
என் குடல் நடுநடுங்க—மனிதீர்
என்குல மைந்தரை எனறுப்பீர் ! (யா)
வாயில்லாப் பிள்ளைகளை—ஐயையோ
வதைத்திடல் வாழ்வுமக் காகிடுமோ (யா)
நில்லுங்கள் மனிதர்களா !—இனி
நீருய்யக் கருதிடின் சீருடனே (யா)
பாற்பொங்கல் பழந்தேங்காய்—மனப்
பத்தியிற் படைத்திடின் பலனளிப்பேன் (யா)
உயிர்களைக் காத்திடினே—மனிதீர்
உங்குலம் வாழ்ந்திடும் உறுதியிதே (யா)
உயிர்களை மாய்த்திடினோ—உடனே
உங்குலம் நசித்திடு முணர்ந்திடுவீர் ! (யா)
வாழுங்கள் கொலை விடுத்தே—உம்மை
வாயாற வாழ்த்துவேன் மாந்தர்களா ! (யாரிங்கு)

ஆடுகளின் அலறல்

(தெம்மாங்கு மெட்டு)

படுகொலையோ ! படுகொலையோ !
பாதக மாந்தர்களா !
விடுதலையோ ! விடுதலையோ !
வீரமாக் காளியன்னை !
மனிதர்களோ ! மாதர்களோ !
மனதி லிரக்க மிலீர் !
சனியர்களாய் வந்தெமை நீர்
சதையுண்ணுஞ் சங்கடமேன் ?
இரக்க மற்ற பாவிகளா
எனெம்மைக் கொல்லுகிறீர் !
கருக்கரிவாள் உமையறுத்தால்,
கதறுவதைக் காணிலிரோ !
தானியங்கள் தாமிலையோ,
சாலவும்மைப் பேணுதற்கே !
ஊனருந்தும் பாவிகளா !
உலகில் நீர் பேய்க்குலமோ ?
பாவமொன்றும் நாமறியோம்
பச்சிளஞ் சேய்களன்றோ !
பாவிகளா எங்களை யேன்
பதைக்கக் கொலைபுரிவீர் ?
ஆண்டவனே என்படைத்தாய்
ஆருயிர் துடிக்குதையோ !
மாண்டிடவே மாந்தர் கையில்
வாழ்வை வழங்கினையோ !

தீமை வேண்டாம் !

(ஆறுமுக மானவடி வேலா பாலா என்ற மெட்டு)

பஞ்சமா பாதகங்கள் வேண்டாம், வேண்டாம் !
பதைக்கக் கொலைபுரிய வேண்டாம். வேண்டாம் !
வஞ்சகமும் பொய்களவும் வேண்டாம், வேண்டாம்!
மற்றுயிரைக் கொன்றருந்த வேண்டாம், வேண்டாம்!
(பஞ்ச)

புகையிலையும், பொடி, சுருட்டும் வேண்டாம், வேண்டாம் !
போதைதருங் கட்குடியும் வேண்டாம், வேண்டாம்!
நகைவலையில் மதிமயங்க வேண்டாம், வேண்டாம்!
நாரியரின் பொய்ம்மயக்கம்வேண்டாம், வேண்டாம்! (பஞ்ச)

பேராசை யழுக்காறும் வேண்டாம், வேண்டாம்!
பிறர்க்கென்றுந் தீமைசெய்ய வேண்டாம், வேண்டாம்!
போர்புரியும் மாயைகளும் வேண்டாம், வேண்டாம் !
பொன்னாசைப் பாவமெல்லாம் வேண்டாம், வேண்டாம் !
(பஞ்ச)

பெரியோரை நிந்தைசெய்ய வேண்டாம், வேண்டாம் !
பெற்றோரை மனவருத்த வேண்டாம், வேண்டாம் !
வறியோரைக் கொடுமைசெய்ய வேண்டாம், வேண்டாம் !
வாயில்லாச் சீவவதை வேண்டாம், வேண்டாம் ! (பஞ்ச)

தென்னிந்திய ரயில்வே அறிக்கை

பிரயாணிகளுக்குச் சௌகரியம்

தென்னிந்திய ரயில்வே பிரயாணிகள் தங்களுடன் இலவசமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கும் எடையைக் காட்டிலும் இன்னும் சிறிது அதிகம் முன்போலவே இலவசமாக எடுத்துப் போகலாமெனப் பின் கண்டவாறு அறிவித்திருக்கின்றனர்:— முதல் வகுப்பு பிரயாணிகள் முன்போலவே 60 சேர் கனமுள்ள மூட்டையைக் கொண்டு போகலாம். இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் இப்போதுள்ள 30 சேர் கனத்துக்குப் பதிலாக 50 சேர் கனமுள்ள மூட்டை வரை கொண்டுபோகலாம். மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் 15 சேருக்குப் பதிலாக 25 சேர்வரை எடுத்துச் செல்லலாம். மத்திய வகுப்புப் பிரயாணிகள் 20 சேருக்குப் பதிலாக 30 சேர் கனம் எடுத்துக்கொண்டு போகலாம்.

ஓடும் ரயிலை நிறுத்திய பிரேதம்

இங்கிலாந்தில் வோக்கிங் என்னும் இடத்திலிருந்து வாட்டர்லூ ஸ்டேஷனுக்குச் சென்று கொண்டிருந்த ரயில், வழியில் திடீரென்று நின்றுவிட்டது. டிரைவர் இறங்கிப் பார்த்ததில், பிரிட்ஜ் ஸ்டேஷனில் போர்ட்டர் வேலை பார்த்து வந்த ஒருவருடைய பிரேதம் தண்டவாளத்தின்மீது கிடந்தது. எஞ்சினிலுள்ள பிரேக் குழாயுடன் பிரேதம் மோதியதால் ரயில் தானாகவே நின்று விட்டது. போர்ட்டர் தண்டவாளத்தைக் கடந்து செல்ல முயற்சித்த போது எஞ்சின் மோதி மாண்டார் என்று தெரிகிறது.

21078

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபாற் கூலி யுள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ.	1	8	0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரூ.	2	0	0
தனிச்சஞ்சிகை ...	... விலை	ரூ.	0	2	0

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும் ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு	...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு ,,	... ரூபா 5—0—0

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை. அணா |) அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press ,Madras.